## நோக்கு

ஏனைய ஊடக ஆற்றல்களுடன் இலங்கையின் முன்னணி வாய்ந்த அச்சிடல் ஊடக நிறுவனமாகத் திகழ்கின்றது.

## இலக்கு

பிரதான செலுத்துநர் என்ற வகையில் தகவல்களைத் தெரிவிப்பதுடன், நாட்டில் மிக நம்பகமான மற்றும் உயர்தர ஊடக உற்பத்திகள்/ சேவைகளை மிக விருப்பத்துடன் வழங்குபவராக இந்த முன்னணி அச்சிடல் ஊடக நிறுவனம் மாற்றம் பெற்றுள்ளது. கலை தொழில்நுட்ப நிலையுடன் இணைந்து பரவலாக செய்திகளைச் சேகரிப்பதிலும் சந்தைப்படுத்தலிலும் கலை தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி மேலான செயற்பாடு மற்றும் அடையாள பெறுமானத்தைத் திறமையாகப் பயன்படுத்துவதன் மூலமும் இதனை நாம் அடையவுள்ளோம். எமது வியாபாரத்துறையில் பெரும்பாலும் தேசிய நலனை வைத்து எமது சந்தைத் தலைமைத்துவம் மற்றும் இலாபகரத் தன்மையை நிலை நிறுத்துவதற்கும் தயக்கமின்றி ஊக்கத்துடனும் தெளிவாகவும் அறிந்து கொள்வதற்கும் நாம் ஊக்கம் பெற்றுள்ளோம்.

## விழுமியங்கள்

- கலாசாரம் : ஆக்கபூர்வமாகவும் கூட்டாகவும், திறமையாகவும் வாடிக்கையாளர்களை வழிநடாத்துவதன் மூலம் நாம் வெற்றி பெறுவோம்.
- வியாபாரம் : பலவகைப்படுத்தப்பட்ட ஊடக மற்றும் சந்தை இடங்களின் அடுத்த தலை முறையினரை நாம் அபிவிருத்திச் செய்வோம்.
- பத்திரிகைத்தொழில் : நம்பகமான மற்றும் உயர்தரமான உள்ளுரை மையமாகக் கொண்ட உள்ளீட்டை நாம் சமர்ப்பிப்போம்.
- சேவை : வாடிக்கையாளர்களுக்கு என்ன தேவை, எப்போது தேவை, எங்கு தேவை மற்றும் எப்படி அவர்களுக்குத் தேவை என்பதைத் தீர்மானிப்பதற்குரிய சுதந்திரத்தை நாம் வாடிக்கையாளர்களுக்கு வழங்குவோம்.
- தரம் : நிலையான மற்றும் வளர்ச்சி பெற்ற திறமையான செயற்பாடுகளுக்கு எமது செயற்பாடுகளின் எல்லாத் துறைகளிலும் சிறந்த முறையில் செயல்முறைப்படுத்துவதற்கு நாம் பாடுபடுவோம்.
- மனோதத்துவம் : எமது வியாபாரக் கருமங்களில் பெரும்பாலும் தேசிய நலனை நாம் வைத்திருப்போம்.
- குழு : நாம் மாற்றத்தை மதிப்பிட்டு உயர் செயற்பாட்டைக் கைமாறுவோம்.

## உள்ளடக்கம்


| | |
|---|---|
| நிதிசார் கண்ணோட்டம் | 1 |
| தலைவரின் செய்தி | 2-5 |
| இலங்கைப் பொருளாதாரம் ஒரு பார்வையில் | 6 |
| நிதிசார் மீள்நோக்கு | 7-10 |
| மனித வளங்கள் | 11-14 |
| இடர் முகாமைத்துவம் | 15 |
| கூட்டுறவு ஆளுமை | 16-17 |
| பணிப்பாளர்களின் அறிக்கை | 18-19 |
| நிதிக் கூற்றுகளுக்கான பணிப்பாளர்களின் பொறுப்பு | 20 |
| கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை | 21-28 |
| கணக்காய்வு அவதானிப்பு தொடர்பாக தலைவரின் அபிப்பிராயங்கள் | 29-35 |
| வருமானக் கூற்று | 36 |
| ஐந்தொகை | 37 |
| நிதி ஓட்டக் கூற்று | 38-39 |
| உரிமை மாற்றத்தின் கூற்று | 40 |
| கணக்கியற் கொள்கைகள் | 41-45 |
| நிதிக் கூற்றுக்கள் மீதான குறிப்புக்கள் | 46-52 |
| பெறுமதி சேர்க்கப்பட்ட கூற்று | 53 |
| பத்து ஆண்டுச் சுருக்கம் | 54 |
| பங்கு தகவல் | 55 |
| கூட்டுறவுத் தகவல் | 56 |

# நிதிசார் கண்ணோட்டம்

| | | 2011 | 2010 | மாற்றம் | மாற்றம் % |
|---|---|---|---|---|---|

**வருமானக் கண்ணோட்டம் மற்றும் விகிதங்கள்**

| | | 2011 | 2010 | மாற்றம் | மாற்றம் % |
|---|---|---|---|---|---|
| மொத்த புரள்வு | ரூபா '000 | 3,075,267 | 2,920,218 | 155,049 | 5.3 |
| வரிக்கு முன்னர் இலாபம் | ரூபா '000 | 14,036 | (359,782) | 373,818 | 103.9 |
| வரிக்குப் பின்னர் இலாபம் | ரூபா '000 | (11,037) | (337,613) | 326,576 | 96.7 |
| ஓர் ஊழியருக்குரிய மொத்த புரள்வு | ரூபா '000 | 1,514 | 1,387 | 127 | 9.1 |
| ஓர் ஊழியருக்குரிய வரிக்கு முன்னர் இலாபம் | ரூபா '000 | 7 | (171) | 177.83 | 104.0 |
| தேசிய பொருளாதாரத்துக்குரிய வருமானம் | ரூபா '000 | 215,234 | 609,575 | (394,341) | (64.7) |
| குறுகிய தவணை முதலீடுகளிலிருந்து வருமானம் | ரூபா '000 | 13,304 | 13,515 | (211) | (1.6) |
| நிதிச் செலவு | ரூபா '000 | 111,715 | 70,806 | 40,910 | 57.8 |
| ஒரு பங்குக்குரிய வருமானம் | ரூபா. | (3.17) | (96.91) | 93.74 | 96.7 |
| மொத்த புரள்வு மீது வரிக்கு முன்னர் இலாபம் | % | 0.46 | (12.32) | 12.78 | 103.7 |
| தொழிற்பட்ட மூலதனம் மீது இலாபம் | % | (4.05) | (119.15) | 115.09 | 96.6 |

**ஐந்தொகைக் கண்ணோட்டம் மற்றும் விகிதங்கள் (ஐந்தொகைத் திகதியன்றுள்ளவாறு)**

| | | 2011 | 2010 | மாற்றம் | மாற்றம் % |
|---|---|---|---|---|---|
| மொத்த சொத்துக்கள் | ரூபா '000 | 1,824,650 | 1,865,262 | (40,611) | (2.2) |
| சொத்து பொறித் தொகுதி உபகணரத்தில் முதலீடுகள் | ரூபா '000 | 115,196 | 129,019 | (13,823) | (10.7) |
| மொத்த பங்குதாரர் நிதியங்கள் | ரூபா '000 | 272,320 | 283,357 | (11,037) | (3.9) |
| வழங்கலில் உள்ள பங்குகளின் எண்ணிக்கை | '000 | 3,484 | 3,484 | - | - |
| ஒரு பங்குக்குரிய தேறிய சொத்துக்கள் | ரூபா. | 78 | 81 | (3.17) | (3.9) |
| நடைமுறை விகிதம் | | 1.44 | 1.46 | (0.02) | (1.4) |
| துரித விகிதம் | | 0.95 | 1.04 | (0.09) | (8.7) |



## நாட்டின் பொருளாதார செயற்பாடு மற்றும் வெளித்தோற்றம்

யுத்தம் முடிவடைந்த பின்னர் சுதந்திர வரலாற்றுக்குப் பின்னர் இலங்கையின் பொருளாதாரம் என்றுமில்லாதவாறு நாட்டின் உயர்ந்த பொருளாதார வளர்ச்சி 2011ஆம் ஆண்டில் 8.3% வளர்ச்சி பெற்று சாதனை படைத்துள்ளது. உண்மையில் பொருளாதாரம் தொடர்ச்சியான இரண்டு ஆண்டுகளில் 8% இற்கு மேற்பட்ட வளர்ச்சி வேகத்தை சக்தி பெறச் செய்துள்ளது. பல ஆண்டுகளாக நிலவிய அழுத்தம் நிறைந்த பொருளாதார நிலைமைகளின் அனுபவம் மற்றும் இன்னும் தீர்க்கப்படாத உலகளாவிய பொருளாதாரமும் மீள் எழுச்சி பெற்று ஊக்கமடைந்துள்ளது. வட, கிழக்கு யுத்த நிலை முடிவுற்றதுடன் புதுப்பிக்கப்பட்ட பொருளாதார செயற்பாட்டின் முன்னணியாக விளங்கும் சாத்தியமான மெக்ரோ பொருளாதார நிலைமைகளுக்கு மத்தியிலும் வாடிக்கையாளர் தேவை மற்றும் முதலீட்டாளரின் நம்பிக்கை வளர்ச்சி பெற்றமைக்கு 2011ஆம் ஆண்டு நல்லதோர் சான்றாகும். மீளாய்வுக்குட்பட்ட ஆண்டில் அரசாங்கம் நாடளாவிய அடிப்படையில் அரசாங்கம் அத்தியாவசிய அபிவிருத்திப் பணிகளில் தொடர்ந்து முதலீடு செய்து உண்மையில் பொருளாதார செயற்பாட்டைத் துரிதப்படுத்துகின்றது.

வளர்ச்சியடைந்து வருகின்ற உள்நாட்டு விநியோக நிலைமைகள் இடர்பாடுகளைத் தவிர்க்கும் திரவ நிலை முகாமைத்துவம் முதலியன உறுதியான தனி அலகு பண வீக்கத்தை நிருவகிப்பதில் காரணகர்த்தாவாக விளங்கியுள்ளதுடன், உண்மையில் நாணயக் கொள்கையைத் தளர்வு பெறச் செய்கின்றது. கடன் வளர்ச்சியைக் குறைப்பதற்கான ஓர் அளவீடாக பிரதிபலிக்கப்பட்ட முரண்பாடற்ற உறுதியான வட்டி வீதங்கள் 2012இல் அதிகரிக்கப்பட்டுள்ளன.

நியாயமான உறுதியானதொரு நாணயப் பரிமாற்ற விகிதத்தை நிருவகித்த பின்னர் இறக்குமதி அழுத்தம் மற்றும் பாதகமான உலகளாவிய அபிவிருத்திகளிடையே சாத்தியமற்ற மெக்ரோ பொருளாதார நிலைமைகளுக்கு மத்தியில் ஒரு முன்னெச்சரிக்கை அளவீடாக ரூபாவினை 3% நாணய மதிப்பிறக்கம் செய்வதை அரசாங்கம் அறிவித்துள்ளது. இந்த நடவடிக்கை ரூபாவை பலவீனப்படுத்தும் நிலைமை மற்றும் நியாயமான உறுதியைப் பெற்றுக்கொள்வதற்கு அதன் சொந்த மட்டத்திற்குச் செலுத்தி தீர்க்கின்ற நிலைமையைத் தோற்றுவித்துள்ளது,

வரி அடிப்படையை இலகுவாக்குதல் விரிவுபடுத்தும் நோக்கிலும் மற்றும் அரசாங்க வருமானத்தை உயர்த்துவதற்கான வரி இணக்கப்பாடு மட்டங்களை மேம்படுத்தும் நோக்கிலும் வரவு செலவுத் திட்டத்தில் அறிவிக்கப்பட்டுள்ள பிரகாரம் மீளாய்வுக்குட்பட்ட ஆண்டு பாரிய வரி சீர்திருத்த ஆண்டாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. வட கிழக்கிலிருந்து அதிகரித்து வருகின்ற உந்துவிசையுடன் வங்கித்துறை நிதி மற்றும் குத்தகைத் துறைகளும் விஷேட வளர்ச்சியைக் காண்பித்துள்ளன. இலங்கை மத்திய வங்கியின் நிதி நிலைப்பாட்டுக்கு இணங்க வாடிக்கையாளர் பாதுகாப்பை உயர்த்துதல் மற்றும் அதிகாரம் வழங்கப்படாத வைப்பு ஏற்றுக்கொள்ளும் நிறுவனங்களுக்கு எதிராகச் செயற்படும் நோக்குடன் புதிய நிதிச் சட்டம் மற்றும் வங்கிச் சட்டத்தைத் திருத்தம் செய்வதன் மூலம் கட்டமைப்பு வேலைகளும் பலப்படுத்தப்பட்டுள்ளன.

## கம்பனி செயற்பாடு

வளர்ச்சி பெற்ற மெக்ரோ பொருளாதார சுற்றாடலுக்கு மத்தியில் கம்பனி அதன் இலாபத்தன்மையை வளர்ப்பதற்கு நாட்டின் நிலைமையின் நன்மையை எடுப்பதற்கு பலனளிக்கும் வியாபார சூழ்நிலைக்கு அமைய ஓர் ஊக்கமூட்டுகின்ற பின்னணியை வழங்கியுள்ளது. மீளாய்வுக்குட்பட்ட காலப்பகுதிக்கு நாம் வரிக்கு முன்னர் இலாபம் ரூபா 14 மில்லியனை பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருந்துள்ளது. விளம்பரம் மூலம் (13%) மற்றும் விநியோகம் மூலம் (14%) முக்கியத்துவம் வாய்ந்த வருமான பங்களிப்பைப் பெற்று மொத்த வருமானம் 5% ஆல் வளர்ச்சியடைந்துள்ளது. 2008 மற்றும் 2010ஆம் ஆண்டுகளிலும் வழங்கப்பட்ட இரண்டு சுயேட்சையான பதவி விலகல் திட்டங்களின் பின்னர் சேர்க்கப்பட்ட கண்டிப்பான செலவுக் கட்டுப்பாட்டு அளவீட்டு தொடரின் பயனாக முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் செலவு 12% ஆல்

குறைக்கப்பட்டுள்ளது. செய்தித்தாள்களை விகிதாசாரப்படுத்துதல், பத்திரிகை இடவசதியை உச்சமயப்படுத்தல் மற்றும் சிறந்த நிபந்தனைகளைப் பெற்றுக்கொள்வதற்கு செய்தித்தாள் கொள்வனவைக் கண்டிப்பாகக் கண்காணித்தல், ஆக்கபூர்வமற்ற மேலதிக நேர வேலை தொடர்பில் கண்டிப்பான கட்டுப்பாடு முதலியவற்றுடன் செலவு அதிகரிப்பைக் குறைப்பதற்கு VRS வழங்கல் மூலம் பின்னணியான தொழில் செலவைக் கணிசமான அளவு சேமிப்பதற்கு செலவுகளைக் கட்டுப்படுத்துவதற்கான அளவீடுகள் சேர்க்கப்பட்டுள்ளன.

செய்தித்தாள், உலோகத் தகடுகள், இயந்திராதி போன்ற பிரதான சேர்வுப் பொருட்களுக்கான இறக்குமதிகள் மீது பாரியளவில் தங்கியிருப்பதால் உலகளாவிய விலை போக்குமுறை காரணமாக எமது நிலை அடிக்கடி பாதுகாப்பற்ற நிலைமைக்கு உட்படுத்தப்படுகின்றது. பெரும்பாலும் இத்தகைய இறக்குமதிகள் மிக அதிகமான செலவில் வங்கி கடன் பெறுகைகள் மூலம் நிதி திரட்டப்படுகின்றன. நிலையான இலாபத்தன்மைக்கு எல்லா இந்த நிகழ்வுகளிலும் எமது இலட்சியத்தை அடைந்து கொள்வதற்கு கடும் முயற்சி எமக்குத் தேவைப்படுகின்றது.

## விநியோகம்

நாம் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் மூன்று பிரதான தினசரி மற்றும் வார இறுதி பத்திரிகைகளையும் பிரசுரிக்கின்றோம். மற்றுமோர் 8 பருவ வெளியீடுகள் மற்றும் பல்வேறு வாசகர் குழுக்களின் சக்தி வாய்ந்த ஆர்வத்தைக் கொண்டோரையும் மையமாகக் கொண்ட 4 சஞ்சிகைகள் உட்பட 2011 டிசம்பர் 31ஆம் திகதியன்று 18 வரையிலான மொத்த பட்டியல் கொண்ட உற்பத்திப் பட்டியலைக் கொண்டுள்ளோம். 2011ஆம் ஆண்டின் பொழுது மிகத்திருப்திகரமாக நிறைவேற்றப்படுகின்ற மூன்று புதிய பருவ வெளியீடுகளை நாம் அறிமுகப்படுத்தியுள்ளோம். 2012இல் இன்று வரை நாம் மற்றுமோர் 2 பருவ வெளியீடுகள் மற்றும் சஞ்சிகையை நாம் சேர்த்துள்ளோம்.

இந்த எல்லாப் பிரசுரங்களும் எமது சொந்த வாகனத் தொகுதிகள் மற்றும் உப ஒப்பந்தக்காரர்கள் மற்றும் இ.போச. பஸ்களையும் பெரும்பாலும் பயன்படுத்தி யாழ்ப்பாண குடா நாடு உட்பட நாடு பூராகவும் விநியோகிக்கப்படுகின்றன. இக்காலப்பகுதியில் விநியோக வலைப்பின்னலை பலப்படுத்துவதனை மையமாகக் கொண்டு சில பிராந்திய விற்பனை அதிகார உரிமை மற்றும் சில முகவர்களையும் நாம் நியமித்துள்ளோம். கண்டி, அநுராதபுரம், கதிர்காமம், மாத்தறை மற்றும் யாழ்ப்பாணத்திலும் அமைக்கப்பட்டுள்ள கிளை அலுவலகங்களுடன் இந்தப் புதிய விநியோக வரிசைகளும் வாசகர்களுக்குத் துரிதமாக சேவையாற்றுவதற்கான விநியோக வளர்ச்சிக்கு வழிவகுத்துள்ளது. மக்களிடையே வழிப்புணர்ச்சியை வளர்க்கும் நோக்கில் பாடசாலை சிறுவர்கள் மற்றும் பொதுமக்களுக்கிடையே மிகப் பிரசித்தம் பெற்றிருந்த பெருமளவிலான நாடுபூராகவும் 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் கருத்தரங்குகள், சுகாதார முகாம்கள், இசைக் கச்சேரிகளையும் நாம் நடாத்தியுள்ளோம்.

## விளம்பரம்

வருடந்தோறும் 2011ஆம் ஆண்டில் கம்பனி விளம்பர வருமானத்தைப் பலப்படுத்தியுள்ளது. ரூபா 2,274.7 மில்லியன் மொத்த விளம்பர வருமானத்தை நாம் பெறக்கூடியதாக இருந்தது. இது 2010ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் ரூபா 259.6 மில்லியன் அதிகரிப்பைக் காட்டுகின்றது. முழுமையாக ஒருங்கிணைக்கப்பட்ட விளம்பர வள முகாமைத்துவ முறை (Adpro) யின் அறிமுகம் இணைய அடிப்படையான விளம்பர இடவசதி ஒதுக்கல் முறை, இலங்கை வங்கி கிளைகள் ஊடாக சிறு விளம்பரங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டமை மற்றும் கிளை மற்றும் முகவர் நிலைய வலைப்பின்னல் பலப்படுத்தப்பட்டமை போன்றவை விளம்பர வளர்ச்சிக்குப் பிரதான பங்களிப்பைச் செலுத்தியுள்ளன.

## வர்த்தக அச்சிடல்

கம்பனியின் வர்த்தக அச்சிடல் பகுதி, தகடு தயாரிப்பதற்கும் மற்றும் ஒரு நான்கு கலர் தகட்டு காகிதம் இருக்கின்ற அச்சிடல் இயந்திரத்தைப் பெற்றுக்கொள்வதற்கும் தகடு (CTP) இயந்திரத்திற்கு விரல் சம்பந்தமான கணனியை அறிமுகப்படுத்துவதன் மூலம் இணைய மிகச் சிறந்த படைப்பு அச்சகத்துக்கு மேலதிக நான்கு உயர் கலர் பிரிவு ஒன்றைச் சேர்ப்பதன் மூலம் எண் சம்பந்தமான தொழில்நுட்பத்தில் நவீன இயந்திராதிகளுடன் அவர்களது தொழில்நுட்ப கொள்ளளவை விஸ்தரித்துள்ளது. இந்த அபிவிருத்தி உற்பத்தித் திறன் அச்சிடல் தரம் மற்றும் வெளியீட்டின் வேகத்தை உயர்த்தியுள்ளது. வருமானத்தை

அதிகரிக்கச் செய்கின்ற நோக்குடனே இந்தத் தொழில்நுட்ப அபிவிருத்திகள் பொறுப்பேற்கப்பட்டுள்ளன. அவ்வாறே அரசாங்கத்தின் பாடசாலை பாடப் புத்தக கேள்வியினதும் ஸ்ரீலங்கா டெலிகொம்மினது பெருமளவிலான தொலைபேசி விவரக்கோவையை அச்சிடுவதற்கான கேள்வியினதும் பரிமாணத்தை நாம் பிடிக்கக்கூடியதாக இருந்துள்ளது.

## ஆற்றலை மேம்படுத்தல்

உயர் போட்டி நிலையான வியாபாரச் சூழ்நிலையை வழங்கி இலாபங்களைப் பெருக்கச் செய்வதற்கு போட்டியைத் தாக்குபிடிப்பதற்கு அதன் இயந்திராதியை எப்பொழுதும் தரமுயர்த்துவதற்குரிய தேவை கம்பனிக்கு உண்டு. மீளாய்வுக்குட்பட்ட ஆண்டில் இது தொடர்பாக வருங்காலத்தில் முன்னணி வாய்ந்த பங்களிப்பை செலுத்துவதற்கான எதிர்பார்ப்புடன் வர்த்தக அச்சிடல் பிரிவைப் பலப்படுத்துவதற்கு கொஸ்மெக்னம் இணை அச்சகம் மற்றும் CTP இயந்திரத்திற்கு நான்கு கலர் பிரிவு ஒன்றைப் பெற்றுக்கொள்வதில் மொத்தம் ரூபா 92.3 மில்லியனை முதலீடு செய்துள்ளது. நாம் ஏற்கனவே நான்கு கலர் தகடு வழங்கும் இயந்திரம், அமரும் ஆசனம் பின்னல் இயந்திரம் மற்றும் கருமபீட சீரான அடுக்குகளுக்கு ரூபா 122.2 மில்லியனை முதலீடு செய்வதற்கு முனைந்துள்ளோம். அத்துடன் விநியோகம் மற்றும் பொருத்துதல் 2012இல் இடம்பெறுமென எதிர்பார்க்கப்படுகின்றது. உங்களது கம்பனி கூடிய விரைவில் அச்சிடல் ஆற்றலில் கம்பனியின் வளர்ச்சிக்கு இந்த முதலீடுகள் பங்களிப்பைச் செலுத்துமென நம்பிக்கை கொண்டுள்ளது.

## தகவல் தொழில்நுட்பம்

அடிக்கடி மாற்றங்களுக்கு உட்படுகின்ற தொழில்நுட்பத்தினால் இயக்கப்படுகின்ற சுற்றாடலில் வாழ்ந்து கொண்டிருக்கும் உங்களது கம்பனி எமது பெரும்பாலான செயற்பாடுகளில் தகவல் தொழில்நுட்பத்தின் அவசியம் மற்றும் முக்கியத்துவத்தைக் கருத்திற்கொள்கின்றது. எமது முன் - அச்சிடல், IT திட்டங்கள் மற்றும் தரவு நிரைப்படுத்தும் திணைக்களங்களின் நேரடியான மேற்பார்வையின் கீழ் மீளாய்வுக்குட்பட்ட ஆண்டில் IT செல்வாக்கு செலுத்துகின்ற பிரயோகங்களில் எமது முதலீடுகள் முக்கியமான மட்டத்தை அடைந்துள்ளது. ஏனென்சிஎல் கணக்கியற் செயற்பாட்டை சுலபமாக வழங்குவதில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்துகின்ற ERP அடிப்படையான கணக்கியல் முறை மற்றும் பொது பதிவேட்டுக்கு நேரடியாக மாற்றப்படுகின்ற விளம்பரக் கட்டண விலைப்பட்டியல்கள் மற்றும் விளம்பர முறையை நிர்மாணிப்பதில் திருப்திகரமான இரண்டு பாரிய IT திட்டங்களை நாம் அவதானிக்கின்றோம். நடைமுறைகளை இலகுபடுத்துவதற்குப் பெரும்பாலான செயற்பாடுகளுக்கு IT பிரயோகத்தைச் சேர்ப்பதற்கும் இந்த வழியைப் பின் தொடர்வதற்கும் நாம் எதிர்பார்த்துள்ளோம். எம்மால் முகம்கொடுக்கப்பட்ட பாரிய இடைஞ்சல்களில் ஒன்று TRIPS உடன்படிக்கையினால் பாதுகாக்கப்படுகின்ற சொப்ட்வெயார் வியாபாரிகளினால் விதிக்கப்படுகின்ற அதிக விலை அனுமதிப்பத்திர செலவாகும். ஆசிரியர் பீட தொழிற்பாடுகளை ஒழுங்குபடுத்தும் நோக்குடன் மேலதிக இரண்டு IT செயல் வழிமுறை தற்பொழுது செயற்பாட்டில் உள்ளது. இந்த செயற்பாடு தொந்தரவானகையினால் செய்யப்படுகின்ற நேர வீண்விரய செயற்பாட்டைக் குறைக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.

## கூட்டுறவு சமூக பொறுப்புக்கள்

முன்னணி வாய்ந்த அச்சிடல் ஊடக கம்பனி என்ற வகையில் நாம் பொதுமக்களின் எதிர்பார்ப்புக்களைக் கருத்திற்கொண்டுள்ளோம். ஆகவே நாம் சமய, தேசிய மற்றும் எமது கலாசாரத்தின் சிறப்பம்சமாகவுள்ள கலாசார பண்டிகைகளுக்கு உதவுவதற்கு மிக உறுதியாகச் செயற்பட்டு வருகின்றோம். மிகிந்தலை ஆலோக பூஜா பண்டிகை, தேசத்திற்கு மகுடம் கண்காட்சி, வருடாந்த போட்டியான வருடாந்த பாடசாலைக்கிடையிலான மாணவர் கிரிக்கட் போட்டி, அமைச்சுக்களுக்கு அவற்றின் செயற்பாடுகளில் விழிப்புணர்ச்சியை உருவாக்குவதற்கு உதவுதல், அமா தஹற வெசாக் பண்டிகை, புதினப் பத்திரிகையுடன் அரசாங்க வர்த்தமானியை இலவசமாகப் வழங்குதல், மாகாணங்களில் இசைக் கச்சேரிகளை ஏற்பாடு செய்தல் போன்ற சில பிரதான நிகழ்வுகளாகும். இதன் ஒரு பகுதியாக நாம் பரவலான காப்புறுதித் திட்டங்கள், போனஸ் மற்றும் ஊழியர் சேமலாப நிதி வழங்கல், பெரும்பாலான கம்பனிகளைவிட மேலாக கவர்ச்சிகரமான வாழ்க்கைச் செலவு அலவன்ஸ், நாடு பரந்த அடிப்படையில் புலமைப் பரிசில் திட்டங்கள், பாடசாலைச் சிறுவர்களுக்கு இலவச பாடசாலைப் புத்தகங்கள் மற்றும் பைகளை வழங்குதல் போன்ற பெருமளவிலான நலன்புரி அளவீடுகள் ஊடாக நாம் எமது ஊழியர்களையும் அவர்களில் தங்கியிருப்போரையும் நாம் கவனித்து வருகின்றோம். இந்த வகையில் சனத்தொகையின் சில பிரிவினருக்கு

தரமான வாழ்க்கை மேம்படுத்தப்படுகின்றது என்பதையிட்டு நாம் பெருமைப்படுகின்றோம். வியாபாரத்தின் வெற்றிக்கு ஆரோக்கியமான மற்றும் சம்பூரணமான தொழில் சக்தி இன்றியமையாதது என்பதை நாம் உறுதியாக நம்புகின்றோம்.

## பாராட்டுரை

செழிப்பான மற்றும் வளம் குன்றிய ஆகிய இரண்டு காலங்களிலும் எனது சபை சகபாடிகள், முகாமைத்துவக் குழு மற்றும் சகல மட்டங்களிலுமுள்ள ஊழியர்களின் அயராத உழைப்பையிட்டு உங்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். ஊழியர்களின் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்ளாதவிடத்து மீளாய்வுக்குட்பட்ட ஆண்டில் பெரும்பாலான இலக்குகளை நாம் அடைந்து கொள்ள சாத்தியப்படமாட்டாது. வருமான பெருக்கத்திற்கு இயந்திராதிகள், கட்டடங்கள் போன்றவை எமது நிலையான சொத்துக்கள் பயன்படுத்தப்பட்ட போதிலும் ஐந்தொகையில் வெளிப்படுத்தப்படாத சொத்துக்களாகவுள்ள ஊழியர்களை எமது மிகப் பெறுமதி வாய்ந்த சொத்துக்களாக தயக்கமின்றி சேர்த்துக்கொள்வதற்கு நாம் விரும்புகின்றேன். ஊழியர்களின் ஒத்துழைப்புடன் ஏஎன்சிஎல் படிப்படியாக பலமடைந்து வருவதையிட்டு சிறிது சந்தேகம் எழுகின்றது. 100 ஆண்டுகளுக்கு மேற்பட்ட எமது நிறுவனம் தற்பொழுது ஓர் உலக பாரம்பரிய பகுதியாக அங்கீகரிக்கப்படுகின்றது. நான் முன்னர் கூறியது போன்று இந்த கீர்த்தி வாய்ந்த பகுதி எமது ஸ்தாபனத் தலைவரின் அவாவுக்கு அமைய என்றும் வெற்றி வாகையுடன் வீறுநடைபோடும் என நாம் நம்புகின்றேன்.

## வருங்காலம்

கம்பனியின் எதிர்காலம் குறித்து அதன் நலனில் நாம் நம்பிக்கை கொண்டுள்ளோம். அத்துடன் 2011ஆம் ஆண்டை நாம் வெற்றிகரமாக முடித்துள்ளோம் என்பதைக் குறிப்பிடுகின்ற அதே வேளை இந்தப் போக்கினை மேலும் அபிவிருத்தி செய்வதற்கும் நாம் உத்தேசித்துள்ளோம். தொழில்சார் சக்தி பெற்ற முகாமைத்துவக் குழுவுடனான வளங்கள் கொண்ட தொழில் சக்தியை வைத்திருக்கும் நாம் ஒவ்வொரு விடயத்தின் நலனிலும் நாம் நம்பிக்கையுடனே நோக்குகின்றோம். கைத்தொழில் அமைதி நிலவுகின்ற காலப்பகுதியை நாம் அனுபவித்து வருகின்றோம். இலங்கையிலுள்ள முன்னணி வாய்ந்த கம்பனிகளுடன் ஒப்பிடுகையில் எல்லாப் போட்டி நிலைமைகளுக்கு மேலாக மிகச் சிறந்த நஷ்டஈடு பொதிகளை நாம் கொண்டுள்ளோம். அண்மையில் நாம் இயந்திராதிகள் பெற்றுக்கொண்டமை எமது கொள்ளளவிற்கு பெறுமதி சேர்த்துள்ளதுடன் நாம் ஏற்கனவே எமது பிரசுரங்களுக்குப் பெறுமதி சேர்க்கப்பட்டுள்ளமைக்குச் சான்று பகர்க்கின்றோம்.



**பந்துல பத்மகுமார**

தலைவர் மற்றும் முகாமைத்துவப் பணிப்பாளர்

# இலங்கை பொருளாதாரம் ஒரே பார்வையில்

| பிரதான பொருளாதார சுட்டிக்காட்டிகள் | 2006 | 2007 | 2008 | 2009 | 2010 (அ) | 2011 |
|---|---|---|---|---|---|---|
| சனத்தொகை புள்ளிவிவர ஆய்வு | | | | | | |
| ஆண்டு நடுப்பகுதி சனத்தொகை ('000 ஆட்கள்) | 19,886 | 20,010 | 20,217 | 20,450 | 20,653 | 20,869 |
| சனத்தொகை வளர்ச்சி (%) | 1.1 | 1.1 | 1.0 | 1.1 | 1.0 | 1.0 |
| தொழில் சக்தி ('000 ஆட்கள்) | 7,599 | 7,489 | 8,082 | 8,074 | 8,108 | 8,236 |
| தொழில் அற்றோர் விகிதம் (தொழில் சக்தி %) | 6.5 | 6.0 | 5.4 | 5.8 | 4.9 | 4.2 |
| **உற்பத்தி அளவு** | | | | | | |
| நடைமுறை சந்தை விலைகளில் மொத்த உள்நாட்டு உற்பத்தி (ரூபா மில்லியன்) | 2,939 | 3,579 | 4,411 | 4,835 | 5,602 | 6,543 |
| சந்தை விலைகளில் ஒரு தலைக்குரிய மொத்த உள்நாட்டு உற்பத்தி (ரூபா) | 147,776 | 178,845 | 218,167 | 236,445 | 271,259 | 313,511 |
| அசலான உற்பத்தி அளவு (மாற்றம் %) | | | | | | |
| மொத்த உள்நாட்டு உற்பத்தி | 7.7 | 6.8 | 6.0 | 3.5 | 8.0 | 8.3 |
| **விலைகளும் கூலிகளும் (மாற்றம் %)** | | | | | | |
| கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண் (2002 = 100) - வருடாந்த சராசரி | 13.5 | 18.8 | 14.4 | 4.8 | 6.9 | - |
| எல்லாச் சம்பளச் சபைகளிலும் வேலையாட்களுக்கான பிரேரிக்கப்பட்ட கூலி விகித சுட்டெண் | 2.1 | 21.4 | 25.6 | 4.9 | 32.0 | 4.6 |
| **நாணயமாற்று விகிதங்கள்** | | | | | | |
| வருடாந்த சராசரி ரூபா/ யுஎஸ்டொலர் | 103.96 | 110.62 | 108.33 | 114.94 | 113.06 | 110.57 |
| வருட முடிவில் ரூபா/ யுஎஸ்டொலர் | 107.71 | 108.72 | 113.14 | 114.38 | 110.95 | 113.90 |
| வட்டி விகிதங்கள் (வருட முடிவில் ஓர் ஆண்டுக்குரிய %) | | | | | | |
| மீளக் கொள்வனவு விகிதம் (முன் இரவில்) | 10.00 | 10.50 | 10.50 | 7.50 | 7.25 | 7.00 |
| எதிரிடையான மீளக்கொள்வனவு விகிதம் (முன் இரவில்) | 11.50 | 12.00 | 12.00 | 9.75 | 9.00 | 8.50 |
| திறைசேரி உண்டியல் விகிதம் 91 நாட்கள் | 12.76 | 21.30 | 17.33 | 7.73 | 7.24 | 8.68 |
| 364 நாட்கள் | 12.96 | 19.96 | 19.12 | 9.33 | 7.55 | 9.31 |
| **வைப்பு விகிதம்** | | | | | | |
| வர்த்தக வங்கிகளின் சராசரி நிறையிடப்பட்ட வைப்பு விகிதம் (AWDR) | 7.60 | 10.31 | 11.63 | 8.01 | 6.23 | 7.24 |
| வர்த்தக வங்கிகளின் 12 மாத நிலையான வைப்புகள் (ஆகக் கூடுதலான) | 14.00 | 20.00 | 20.25 | 19.00 | 17.00 | 11.00 |
| **கடன்கொடுக்கும் விகிதங்கள்** | | | | | | |
| வர்த்தக வங்கிகளின் சராசரி நிலையிடப்பட்ட பிரதான கடன் கொடுக்கும் விகிதங்கள் (AWPR) | 15.19 | 17.95 | 18.50 | 10.91 | 9.29 | 10.77 |
| **மூலதன சந்தை** | | | | | | |
| எல்லா பங்குவிலை சுட்டெண் (1985 = 100) | 2,722.4 | 2,541.0 | 1,503.0 | 3,385.6 | 6,635.9 | 6,074.4 |
| மிலங்கா விலை சுட்டெண் (1998 டிசம்பர்=1000) | 3,711.8 | 3,291.9 | 1,631.3 | 3,849.4 | 7,061.5 | 5,229.2 |
| சந்தை மூலதனமயமாக்கல் (ரூபா பில்லியன்) | 834.8 | 820.7 | 488.8 | 1,092.1 | 2,210.5 | 2,213.9 |

(அ) தற்காலிகமானது

மூலம்: இலங்கை மத்திய வங்கி வருடாந்த அறிக்கை 2011

# நிதிசார் மீள்நோக்கு

## 1) செயற்பாட்டு பெறுபேறுகள்

2011இல் கம்பனி வரிக்கு முன்னர் இலாபம் ரூபா 14.0 மில்லியனை அடைந்து சாதனை படைத்துள்ளது. 2010 நிதி பெறுபேற்றுடன் ஒப்பிடுகையில் இது ரூபா 373.8 மில்லியன் அதிகரிப்பைக் காட்டுகின்றது. உண்மையில் மொத்த வருமானத்தில் இந்த அதிகரிப்பு எல்லையைக் கொண்டிருந்தது. இந்த ஆண்டு செலவினத்தின் முறையான நிருவாகமே வரிக்கு முன்னர் இலாபத்தின் அதிகரிப்புக்குப் பங்களிப்பு செலுத்தியுள்ளது.

| விடயம் | 2011 | 2010 |
|---|---|---|
| வருமானம் | 3,075.3 | 2,920.2 |
| விற்பனைச் செலவுகள் | (1,524.8) | (1,504.8) |
| மொத்த இலாபம் | 1,550.5 | 1,415.4 |
| ஏனைய வருமானம் | 117.3 | 107.0 |
| நிருவாகச் செலவுகள் | (1,230.2) | (1,319.6) |
| விநியோகச் செலவுகள் | (311.9) | (319.8) |
| நிதிச் செலவுகள் | (111.7) | (70.8) |
| VRS செலவுகள் | 0.0 | (172.0) |
| வரிக்கு முன்னர் இலாபம் | 14.0 | (359.8) |

**வ.மு.இ.இன் நகர்வு**



## 2) வருமானம்

### மொத்த வருமானம்

கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு இந்த ஆண்டில் மொத்த வருமானம் 2010 உடன் ஒப்பிடுகையில் 5% வளர்ச்சியுடன் ரூபா 155.1 மில்லியனால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

| விடயம் | 2010-ரூபா மில். | 2011-ரூபா மில். | அதிகரிப்பு-ரூபா மில். | அதிகரிப்பு-% |
|---|---|---|---|---|
| விளம்பர வருமானம் | 2,015.1 | 2,274.7 | 259.6 | 13% |
| விநியோக வருமானம் | 592.5 | 675.0 | 82.5 | 14% |
| வர்த்தக அச்சிடல் வருமானம் | 310.6 | 124.3 | (186.3) | (60%) |
| வருடாந்த பிரசுர வருமானம் | 2.0 | 1.3 | (0.7) | (35%) |
| **மொத்த வருமானம்** | 2,920.2 | 3,075.3 | 155.1 | 5% |

மொத்த வருமானம்
ரூபா மில்லியனில்




## விளம்பர வருமானம்

கம்பனியின் பாரிய வருமான வளம், விளம்பரம் வருடா வருடம் அறிவிக்கப்படுவதுடன் 2011இல் ரூபா 259.7 மில்லியன் அதிகரிப்பைக் கொண்டுள்ளது. இது **13%** வளர்ச்சியைக் காட்டுகின்றது. மாறாக மின்னியல் மற்றும் இணைய அடிப்படையான விளம்பரத்திற்கு சந்தையை மாற்றுவதற்குப் பதிலாக மேலான வாடிக்கையாளர் சேவையுடன் விளம்பரம் **ERP** முறையை அமுல்படுத்தல் இதன் வெற்றிக்குப் பிரதான பங்களிப்பைச் செலுத்தியுள்ளது.

விளம்பர வருமானம்
ரூபா மில்லியனில்



## விநியோக வருமானம்

உயர்ந்து வருகின்ற தொழில்நுட்ப அபிவிருத்திகள் சவாலாக இருந்த போதிலும், கம்பனி 2011இல் 14% விநியோக வருமான வளர்ச்சியை பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருந்துள்ளது. வருமானத்தில் ஒப்பீட்டு அதிகரிப்பு ரூபா 82.5 மில்லியன் அதிகரிப்பாகும்.

மொத்த விநியோக வருமானம்
ரூபா மில்லியனில்




## வர்த்தக அச்சிடல் வருமானம்

கடந்த சில வருடங்களாக எமது வர்த்தக அச்சிடல் பிரிவின் கொள்ளளவு மற்றும் தரத்தை நாம் விஸ்தரித்துள்ளோம். அத்துடன் அரசாங்க பாடசாலை பாடப் புத்தகம் அச்சிடல் கேள்வி மற்றும் ஸ்ரீலங்கா டெலிகொம் தேசிய தொலைபேசி விபரக் கொத்து அச்சிடல் வேலையின் பாரிய பரிமாணத்தை நாம் பிடிக்கக்கூடியதாக இருந்துள்ளது. இந்த ஆண்டு அரசாங்க பாடசாலை பாடப் புத்தக அச்சிடலுக்கு கண்டிப்பான கேள்வியில் வெற்றியளிக்காமையினால் இந்த நிலைமை 2011ஆம் ஆண்டு பிரதானமாக வர்த்தக அச்சிடல் வருமானம் குறைவடைகின்ற நிலைமையைத் தோற்றுவித்துள்ளது.

வெளிவாரி வேலைகளின் ஒரு பகுதியாக கம்பனியின் புதினப் பத்திரிகைகளுக்கு வர்த்தக அச்சிடல் பிரிவு பெறுமதி சேர்த்துள்ளது. இதன் பலனாக இப்பிரிவின் மொத்த புரள்வு பின்வருமாறு:

| விடயம் | 2010-ரூபா மில்லியன் | 2011-ரூபா மில்லியன் |
|---|---|---|
| வெளிவாரி வருமானம் | 310.6 | 124.3 |
| உள்ளக வருமானம் | 226.8 | 283.4 |
| **மொத்த வருமானம்** | 537.4 | 407.7 |

வர்த்தக அச்சிடல் வருமானம்
ரூபா மில்லியனில்



### 3) விற்பனைச் செலவுகள்

செய்தி அச்சிடல் பொருட்கள் விற்பனைச் செலவுகளின் பாரிய பங்கினை உள்ளடக்குகின்றது. 2011இல் இது விற்பனைச் செலவுகளின் 79% ஐப் பிரதிநிதிப்படுத்துகின்றது. 2010இல் செய்தி அச்சிடல் பொருட்களின் விற்பனைச் செலவுகளின் 70% ஐக் கொண்டிருந்தது. 2011இல் அதிகரிப்புக்கு செய்தி அச்சிடல் தாள்களின் உலகளாவிய விலை அதிகரிப்பு மற்றும் நாணயமாற்று விகிதங்களில் அதிகரிப்பு போன்றவை பிரதான காரணமாகும்.







### 4) செலவினங்கள்

பகுப்பாய்வின் கீழ் மொத்தச் செலவினங்கள் ரூபா 228.5 மில்லியனால் குறைக்கப்பட்டுள்ளது என்பதைக் குறிப்பிடுகின்றது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 12% குறைப்பைக் காட்டுகின்றது. கடந்த ஆண்டில் செலவிடப்பட்ட சுயேட்சையான ஓய்வூதியத்திட்டம் (**VRS**) செலவினங்கள் 2011இல் நிதிச் செலவினங்களின் அதிகரிப்புக்குப் பிரதான பங்களிப்பைச் செலுத்தியுள்ளது.

| **விடயம்** | **2010-ரூபா மில்.** | **2011-ரூபா மில்.** | **அதிகரிப்பு-ரூபா மில்.** | **அதிகரிப்பு-%** |
|---|---|---|---|---|
| நிருவாகச் செலவுகள் | 1,319.7 | 1,230.2 | (89.5) | (7%) |
| விநியோகச் செலவுகள் | 319.8 | 311.9 | (7.9) | (2%) |
| நிதிச் செலவுகள் | 70.8 | 111.7 | 40.9 | 58% |
| VRS செலவுகள் | 172.0 | 0.0 | (172) | (100%) |
| **மொத்த செலவுகள்** | **1,882.3** | **1,653.8** | **(228.5)** | **(12%)** |

மொத்த செலவுகள்
ரூபா மில்லியனில்



# மனித வளங்கள்

கம்பனியின் வியாபரத்தின் மிக முக்கியமான பகுதியாக மனித மூலத்தை அங்கீகரித்திருக்கின்ற ஏஎன்சிஎல் மிகச் சிறந்த முறையில் சேவையை வழங்க விரும்புகின்ற ஊழியர்களை இனம்காணுவதற்கு தொடர்ந்து மனித வளங்களை மீள் மதிப்பீடு செய்கின்றது. தொடர்ந்து மனித வளங்களை மீள் மதிப்பீடு செய்கின்றது. கம்பனியின் செயல் அணுகுமுறை குறிக்கோளுக்கமைய ஒழுங்கமைவு செய்யும் நோக்குடன் ஊழியர்களைக் கவர்வதற்கும் தொடர்வதற்கும் அபிவிருத்தி செய்வதற்கும் தொடர்ந்து கம்பனி செயற்பட்டு வருகின்றது. ஏஎன்சிஎல் ஊழியர்களின் வாழ்க்கைக்கு பெறுமதி சேர்க்கின்ற அதே வேளை ஊழியர்களின் நலனுக்கு தொடர்ந்து அதன் பொறுப்புக்களை நிருவகித்து வருகின்றது.

### பால் வேறுபாடு (31/12 அன்றுள்ளவாறு)

| | 2011 | | 2010 | |
|---|---|---|---|---|
| | **எண்ணிக்கை** | % | **எண்ணிக்கை** | % |
| ஆண் | 1641 | 81% | 1,699 | 81% |
| பெண் | 390 | 19% | 406 | 19% |
| மொத்தம் | 2031 | 100% | 2,105 | 100% |

பால் வேறுபாடு 2011




பால் வேறுபாடு 2010




### சேவை பகுப்பாய்வு

| **சேவை ஆண்டுகள்** | 2011 | | 2010 | |
|---|---|---|---|---|
| | **எண்ணிக்கை** | % | **எண்ணிக்கை** | % |
| 25 மேல் | 176 | 9% | 190 | 9% |
| 20-25 | 161 | 8% | 172 | 8% |
| 5-20 | 1379 | 68% | 1,319 | 63% |
| 5க்கு கீழ் | 315 | 16% | 424 | 20% |
| **மொத்தம்** | 2031 | 100% | 2,105 | 100% |

சேவை பகுப்பாய்வு 2011




சேவை பகுப்பாய்வு 2010



**வயது பகுப்பாய்வு**

| சேவை ஆண்டுகள் | 2011 | | 2010 | |
|---|---|---|---|---|
| | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % |
| 50 மேல் | 372 | 18% | 388 | 18% |
| 50-40 | 658 | 32% | 657 | 31% |
| 40-30 | 705 | 35% | 716 | 34% |
| 30-20 | 296 | 15% | 344 | 16% |
| **மொத்தம்** | 2031 | 100% | 2,105 | 100% |

வயது பகுப்பாய்வு 2011




வயது பகுப்பாய்வு 2010




**ஊழியருக்குரிய பங்கு**

| | 2011 ரூபா '000 | 2010 ரூபா '000 |
|---|---|---|
| ஓர் ஊழியருக்குரிய வருமானம் | 1,514 | 1,387 |
| ஓர் ஊழியருக்குரிய தேறிய சொத்துக்கள் | 134 | 135 |
| ஓர் ஊழியருக்குரிய பெறுமதி சேர்ப்பு | 809 | 714 |

**பயிற்சியளித்தல்**

ஊழியர்களின் செயற்திறனை வளர்த்தல் மற்றும் வெளியுலக அறிவைக் கொண்டு வருகின்ற நோக்குடன் உள்ளக மற்றும் வெளிப்புற பயிற்சியளித்தல் ஆகிய இரண்டும் செயற்திட்டங்களிலும் பங்கு கொள்வதற்கு கம்பனியினால் ஊழியர்கள் ஊக்குவிக்கப்படுகின்றனர். கிட்டத்தட்ட 53 ஊழியர்கள் 2011ஆம் ஆண்டு உள்ளூர் மற்றும் வெளிநாட்டு பயிற்சியளித்தல் செயற்திட்டங்களுக்கு பங்குபற்றுவதற்காக வாய்ப்புப் பெற்றுள்ளனர்.

**விளையாட்டு**

ஏஎன்சிஎல் எப்போதும் பல்வேறு விளையாட்டு செயற்பாடுகளில் பங்குபற்றுவதற்கு ஊழியர்களை வைத்திருக்கின்றது. இவ்வாறான நிகழ்வுகளில் சார்ந்திருப்பதற்கு விரும்புகின்ற ஊழியர்களுக்கு வாய்ப்புக்களும் வசதிகளும் வழங்கப்பட்டுள்ளன. கணிசமான எண்ணிக்கை கொண்ட ஊழியர்கள் பல்வேறு விளையாட்டு நிகழ்ச்சிகளிலும் பங்குபற்றி 2011இல் பரிசுகளைப் பெற்றுள்ளனர்.

# மனித வளங்கள்

## சாதனைகள்

### கெரம் (Carrom)

| டுர்னமன்ட் | சாதனைகள் | பெயர் |
|---|---|---|
| நோவிஸஸ்-ஆட்கள் தனி | சாம்பியன் | சமந்த குணவர்தன |
| நோவிஸஸ்-ஆட்கள் இரட்டை | சாம்பியன் | சி.விஜேகுணவர்தன. ஐ.டி.பி. நயனாசிரி |
| ''பி'' பிரிவு-ஆட்கள் குழு | சாம்பியன் | சி.விஜேகுணவர்தன. ஐ.டி.பி. நயனாசிரி<br>திஸ்ஸ தம்மிக, எம்.பி. மங்கள |

### டேபள் டென்னிஸ்

| டுர்னமன்ட் | சாதனைகள் | பெயர் |
|---|---|---|
| இணைக்குழு-பெண்கள் குழு | சாம்பியன் | தீபிக்கா ரொட்ரிகோ, சம்பா டி சில்வா |
| நொக்அவுட்-பெண்கள் குழு | சாம்பியன் | நதீகா குமாரசிங்க |
| இணைக்குழு-கலப்பு இரட்டைகள் | சாம்பியன் | தீபிக்கா ரொட்ரிகோ |
| நொக்அவுட்-கலப்பு இரட்டைகள் | சாம்பியன் | சமிந்த விஜேகுணவர்தன |
| திறந்த-கலப்பு இரட்டைகள் | சாம்பியன் | |
| திறந்த-பெண்கள் தனி | சாம்பியன் | தீபிக்கா ரொட்ரிகோ |
| நீண்ட அனுபவமுள்ள பெண்கள் தனி | சாம்பியன் | சம்பா டி சில்வா |
| திறந்த-பெண்கள் இரட்டை | சாம்பியன் | டி.எஸ். ரொட்ரிகோ, சி.டி. சில்வா |



## ஊழியர் நலன்புரி வசதிகள்

ஊழியர் நலன் திட்டங்களுக்கான பங்களிப்பு

| | 2011<br>ரூபா மில்லியன் | 2010<br>ரூபா மில்லியன் |
|---|---|---|
| ஊ.சே. நிதிக்கு கம்பனியின் கொடுப்பனவு | 74 | 75 |
| ஊ.ந.நிதிக்கு கம்பனியின் கொடுப்பனவு | 15 | 15 |
| பணிக்கொடைக்கான ஏற்பாடு | 52 | 81 |
| ஊழியர் குழாம் நலன்புரி கொடுப்பனவு | 95 | 79 |

## ஊழியர்களின் சார்பாக




25 ஆண்டுகள் சேவை வெகுமதி




35 ஆண்டுகள் சேவை வெகுமதி

2011இல் 25 - 35 ஆண்டுகள் சேவை காலப்பகுதியைப் பூர்த்தி செய்துள்ள ஊழியர்கள் வருடாந்த நிகழ்வின் போது கௌரவிக்கப்பட்டனர்.






5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் வழங்கல்

## இடர் முகாமைத்துவம்

சந்தைப் பொருளியலில் போட்டியின் தவிர்க்க முடியாத மூலகமாக இடர் முகாமைத்துவம் விளங்குகின்றது. கம்பனியின் குறிக்கோள் மற்றும் இலக்குகளை அடைந்துகொள்கின்ற பொழுது ஆண்டுகள் தோறும் உண்மையான வளர்ச்சியை அடைந்துகொள்ளக்கூடிய வகையில் இடர்பாடுகளை முகாமைத்துவப்படுத்தல் பரஸ்பர முக்கியத்துவம் வாய்ந்ததாகக் திகழ்கின்றது. முதலீடு மற்றும் செயற்பாடுகள் தொடர்பாகவும் அவ்வாறே கண்காணிப்புக்குப் பயன்படுத்தப்பட்ட முறைமைகள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் திறமையை மீள் மதிப்பீடு செய்வதற்கும் பொறுப்பு வாய்ந்த கம்பனி என்ற வகையில் நாம் பலவகையான இடர்பாடுகளை மீள் மதிப்பீடு செய்யக்கூடிய நிலையிலும், முடிவு எடுப்பதற்கு இதன் விளைவுகளை கூட்டிணைக்கக்கூடியதாகவும் உள்ளோம். ஏ.என்.சி.எல் இடர் முகாமைத்துவப் பிரிவை ஸ்தாபித்துள்ளது. அத்துடன் வியாபாரத்தின் பல்வேறு பகுதிகளிலும் முகங்கொடுக்கப்பட்ட முக்கியத்துவம் வாய்ந்த இடர்பாடுகளை இனம் காணுதல், மீள் மதிப்பீடு செய்தல் மற்றும் முகாமைத்துவப்படுத்துவதற்கும் உரிய நடைபெற்று வருகின்ற செயற்பாட்டை அமுல்படுத்தி யுள்ளது. கம்பனியின் இடர் முகாமைத்துவ முறையில் பேசப்படுகின்ற பாரிய இடர்பாடுகள் பின்வருமாறு:

## கடன் இடர் முகாமைத்துவம்

கடன் இடர்பாடு என்பது கம்பனியின் கடன்பட்டோர் உடன்பட்ட காலப்பகுதிக்குள் செலுத்தத் தவறியதனால் எழுகின்ற கணிசமான நிதி இழப்பையே குறிக்கின்றது. கடன் சேகரிப்பு செயற்பாட்டைக் குறைக்க முடியுமான காரணிகளிடையே சந்தையில் முக்கியத்துவம் வாய்ந்த பொருளாதார பின்னடைவு, இயற்கை அழிவுகள் மற்றும் ஒழுங்கீனமான சிவில் முறை என்பவற்றைக் குறிப்பிடலாம்.

முறையான மீள் மதிப்பீட்டின் பின்னர் அனுபவமுள்ள சக ஊழியர்களினால் கடன் அங்கீகாரம் செய்யப்படுகின்றது. கடன் அங்கீகாரத்திற்காக வித்தியாசமான அதிகார மட்டத்தைக் கொண்டுள்ளோர் ஒன்றுதிரட்டப்படுகின்றனர். வாடிக்கையாளரிடமிருந்து மேலதிக பாதுகாப்பாக உத்தரவாதக் கடிதம், வைப்புக்கள் போன்ற பிணைகள் பெற்றுக்கொள்ளப்படுகின்றன. கடன் நடைமுறைகள் ஒழுங்காகப் பின்பற்றப்படுகின்றன. அத்துடன் சந்தேக கடன்பட்டோர்களுக்காக போதுமான விதிகள் செய்யப்படுகின்றன.

## செயற்பாட்டு இடர் முகாமைத்துவம்

மனிதனால் இழைக்கப்படும் தவறு பொருத்தமற்ற அல்லது தவறான உள்ளக செயற்பாடுகள், முறைதவறுதல் உள்ளகக் கட்டுப்பாட்டில் பிளவு, மோசடி சட்டம் மற்றும் விதிகளின் இணக்கப்பாடற்ற தன்மை அல்லது புலப்படாத கோர சம்பவங்கள் போன்றவற்றின் விளைவாக ஏற்படுகின்ற இழப்புக்கள் காரணமாக ஏற்படுகின்ற இடர்பாடு செயற்பாட்டு இடர்பாடு என அழைக்கப்படுகின்றது. கம்பனியின் உள்ளக கட்டுப்பாட்டு முறையின் ஒருமுகப்படுத்தப்பட்ட பகுதியாக விளங்குகின்ற உள்ளகக் கணக்காய்வுப் பகுதி கணக்காய்வுக் குழுவுக்கு அறிவிக்கின்றது. உள்ளகக் கட்டுப்பாடுகளுக்கு விசுவாசமாக இருத்தல், போதுமான அளவு உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பன கம்பனியின் உள்ளகக் கணக்காய்வுப் பகுதியினால் தொடர்ச்சியாக நோக்கப்படுகின்றது. கம்பனியின் உருவமுள்ள சொத்துக்கள் இனம் காணப்பட்ட இடர்பாடுகளுக்கு முரணாக காப்புறுதி செய்யப்பட்டுள்ளன. சகல காப்புறுதிக் கொள்கைகளும் வருடாந்த மீள் மதிப்பீடு மற்றும் மீள்நோக்குக்கு உட்பட்டதாகும்.

## சட்ட இடர் முகாமைத்துவம்

ஏஎன்சிஎல் அதன் சாதாரண வியாபாரக் கருமங்களில் சட்ட ரீதியான வழக்குகள், சட்ட நடவடிக்கைகள் மற்றும் ஏனைய கோரிக்கைகளுக்குட்பட்டதாக விளங்குகின்றது. இந்த எல்லா விவகாரங்களும் இடர்பாடுகள் மற்றும் நிச்சயமற்ற தன்மை கொண்டவையாக விளங்குகின்றன. அத்துடன் எந்தவொரு நிச்சயமட்டத்துடன், வெளிப்பாட்டை தீர்க்க தரிசனம் செய்ய முடியாதுள்ளது. இடர்பாட்டைக் குறைப்பதற்கு கம்பனியின் எல்லா செயற்பாடுகள் மற்றும் நிகழ்வுகளும் சட்டம் மற்றும் அரச நியதி தேவைகளுடன் இணக்கமுடையவை என்பதை சட்டப் பகுதி உறுதிப்படுத்துகின்றது.

## மனிதவளம் தொடர்பான இடர் முகாமைத்துவம்

வியாபாரத்தைத் தொடர்ச்சியாக மேற்கொள்வதற்கு முக்கியத்துவம் வகிக்கின்ற மனித மூலதனத்தை அபிவிருத்தி செய்வதில் கம்பனி கவனத்தைச் செலுத்தி வருகின்றது. கம்பனியின் மனிதவள அபிவிருத்தித் தொழிற்பாட்டின் மூலம் மதிப்பிடப்படுகின்ற தேவைகளின் பேரில் ஊழியர்கள் வெளிநாட்டு மற்றும் உள்ளூர் அடிப்படையிலும் பொருத்தமான முறையில் பயிற்றுவிக்கப்பட்டு வருகின்றனர்.

## சுகாதார மற்றும் பாதுகாப்பு இடர் முகாமைத்துவம்

வியாபாரத்தைத் தொடர்ந்து கொண்டுசெல்வதற்கு மனித மூலதனத்தின் பாதுகாப்பு மிக இன்றியமையாதது என கம்பனி நம்பிக்கை கொண்டிருப்பதனால் தொழில்புரிகின்ற இடத்தில் ஊழியர் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு தொடர்பான இடர்பாடு மிக முக்கிய கவனத்தைப் பெறுகின்றது. ஒவ்வொரு அமைவிடத்திலும் பயிற்றப்பட்ட ஆட்களை வேலைக்கு அமர்த்துவதுடன் காயம் ஏற்படுத்துவதற்கு சாத்தியமாகவுள்ள எல்லா இயந்திராதி மற்றும் உபகரணங்கள் தொடர்பாகவும் பாதுகாப்பு முன் எச்சரிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

## தகவல் இடர் முகாமைத்துவம்

கணனி முறையின் உதவியுடன் ஒவ்வொரு பங்குதாரர்களினதும் தேவைகளைப் பூர்த்தி செய்கின்ற சரியான மற்றும் தொடர்பான தகவலை கம்பனி சமர்ப்பிக்கக்கூடியதாக உள்ளது. இந்த முறை காலம் தோறும் மீள்நோக்கப்படுகின்றதுடன், சொப்ட்வெயார் வழங்குநருடன் ஒரு பராமரிப்பு ஒப்பந்தம் அமுலில் உள்ளது.

கூட்டுறவு ஆளுமை என்பது கம்பனிகள் எந்த முறைகள் மூலம் பணிப்புரை மற்றும் கட்டுப்படுத் தப்பட வேண்டுமென்பதை விளக்குகின்றது. கம்பனியின் செயற்பாடுகள் என்றும் உயர் ஒழுக்க தரங்கள் மற்றும் சகல பங்குதாரர்களினதும் மிகச் சிறந்த ஆர்வத்திற்கமையவும் நடத்தப்படுகின்றன என்பதை பணிப்பாளர் சபை உறுதிப்படுத்துகின்றது. இது தொடர்பாக இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் பிரசுரிக்கப்பட்ட கூட்டுறவு ஆளுமை தொடர்பாக சிறந்த நடத்தை கோட்பாடு கொள்கைகள் மற்றும் விதிகளினாலும் வழிநடத்தப்படுகின்றது.

## பணிப்பாளர் சபை உள்ளடக்கம்

பணிப்பாளர் சபை, தலைவர் மற்றும் நான்கு நிறைவேற்றுப் பணிப்பாளர்களையும் உள்ளடக்குகின்றது. பொது நம்பிக்கையாளர் மூன்று பணிப்பாளர்களையும் பங்குதாரர்கள் இரண்டு பணிப்பாளர்களையும் நியமிக்கின்றனர். தலைவர் கம்பனியின் முகாமைத்துவப் பணிப்பாளராக விளங்குகின்றார். அத்துடன் அவர் சபையை இயக்குவதற்கும் கட்டளையைப் பேணிப்பாது காப்பதற்கும் சபைத் தொழிற்பாடுகளின் திறமையாக நிறைவேற்றுவதனை எளிதாக்குவதற்கும் பொறுப்பாக இருக்கின்றார்.

## கூட்டங்கள் மற்றும் வருகையை ஒழுங்காக வைத்திருத்தல்

சபை வழமையாக இரண்டு வாரங்களுக்கு ஒருமுறை கூட்டங்களை நடாத்துகின்றது. அத்துடன் தேவையான போது விஷேட கூட்டங்கள் நடாத்தப்ப டுகின்றன. பணிப்பாளர்கள் தொடரான திறமைகள் மற்றும் அனுபவத்தையும் கொண்டுள்ளனர். அத்துடன் ஒவ்வொருவருக்கும் சபையில் பேச்சு வார்த்தைகளுக்குக் கணிசமான அறிவையும் சுயேட்சையான தீர்ப்பையும் கொண்டுவருகின்றனர். 2010ஆம் ஆண்டின் பொழுது இச்சபை 21 கூட்டங்களைக் கூட்டியுள்ளது.

கீழே காணப்படுகின்ற அட்டவணை ஒவ்வொரு பணிப்பாளரினதும் வருகையை விளக்குகின்றது.

| பணிப்பாளரின் பெயர் | வருகைதந்த கூட்டங்களின் எண்ணிக்கை |
|---|---|
| திரு. பந்துல பத்மகுமார | 19 |
| திரு. சந்திரசேகரம் சண்முகநாதன் | 07 |
| திரு. எதிரிசிங்க விதானகே பிரசாத் ரசங்க ஹரிஸ்சந்திர | 19 |
| திரு. உபுல் ரன்ஜன் சமரசிங்க திஸாநாயக்க | 17 |
| திரு. சீலரத்ன செனரத் (புதிய நியமனம்) | 19 |

## சபை குழுக்களும் அவர்களது கூட்டமைப்பும்

சபை, கணக்காய்வுக்குழு மற்றும் மூலதனச் செலவு, இறக்குமதிகள் மற்றும் உள்ளூர் கொள்வனவு களுக்காக கொள்வனவுக் குழுக்களையும் நிறுவியுள்ளதுடன் ஒவ்வொன்றிலும் பணிப்பாளர்கள் மற்றும் சிரேஷ்ட முகாமையாளர்களையும் கொண்டுள்ளது.

## நிதி அறிக்கை மற்றும் புலப்படுதல்

கம்பனியின் நிதிக் கூற்றுக்கள் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் முன்வைக்கப்பட்ட கணக்கியற் தரங்கள், பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கியற் கோட்பாடுகள் மற்றும் எண்ணக்கருக்களைப் பின்பற்றி தயாரிக்கப்பட்டுள்ளன. இதன் வருடாந்த அறிக்கையில் உட்படுத்தப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்கள் கணக்காய்வாளர் நாயகத்தினால் கணக்காய்வு செய்யப்பட்டுள்ளன.

## நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கான பணிப்பாளர்களின் பொறுப்பு

நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பதற்கான பணிப்பாளர்களின் பொறுப்பு தொடர்பான கூற்றுக்கள் இந்த வருடாந்த அறிக்கையின் பக்கம் 20 இல் கொடுக்கப்படுகின்றன.

## அரச நியதி கொடுப்பனவு தொடர்பான இணக்கப்பாடு

எல்லா அறியப்பட்டுள்ள அரச நியதி கொடுப்பனவுகள் ஒழுங்கான முறையில் செலுத்தப்பட்டுள்ளதுடன் ஊழியர்கள் சார்பாக செலுத்தப்பட வேண்டிய கொடுப்பனவுகளும் நிதிக் கூற்றுக்களில் வழங்கப்பட்டுள்ளன என்பதைப் பணிப்பாளர் சபை உறுதிப்படுத்துகின்றது.

## உள்ளகக் கட்டுப்பாடு

உள்ளகக் கட்டுப்பாடுகளின் முறைகள், தவறுகள், தவிர்க்கப்படவேண்டியவை. மற்றும் குறைகள் கம்பனியின் சொத்துக்களைப் பாதுகாப்பதிலிருந்து எழுகின்ற இடர்பாடுகளை உள்ளடக்குதல், கடமைகளைத் தனியாகப் பிரித்தல், அதிகார மட்டங்கள் மற்றும் உள்ளக மற்றும் வெளிவாரி கணக்காய்வு போன்ற ஒழுங்கான நடைமுறைகளூடாகப் புத்தக செட்டை முறையாகப் பராமரித்தல் போன்றவற்றை வடிவமைத்துள்ளன.

கம்பனி தற்பொழுது போதிய மற்றும் திறமையான

உள்ளகக் கட்டுப்பாடுகளைக் கொண்டுள்ளது என்பதை உறுதிப்படுத்துவதற்கான பொறுப்பு சபைக்கு உண்டு. தினசரி நிதி மற்றும் நிதி சாராத செயற்பாடுகள் கம்பனியின் உள்ளகக் கணக்காய்வுப் பகுதியினால் முறையாக மீளாய்வு செய்யப்படுகின்றன.

## பங்குதாரர்களுடனான உறவு முறை

கம்பனி மீது பங்குதாரர்களினால் மேற் கொள்ளப்படுகின்ற முக்கியமான பங்களிப்பை பணிப்பாளர் சபை தொடர்ந்து அங்கீகரித்துள்ளது. வருடாந்த பொதுக் கூட்டத்தில் பங்குதாரர்களின் சுறுசுறுப்பான பங்களிப்பையும் அவர்களது அபிப்பிராயங்களையும் ஏஎன்சிஎல் எப்பொழுதும் வரவேற்கின்றது.

## கூட்டுறவு சமூக பொறுப்பு

சமுதாயம் மற்றும் சமூகம் தொடர்பாக கம்பனி பெருமளவில் அதன் பொறுப்புக்களை நன்கு விளங்கியுள்ளது. இது தொடர்பாக கம்பனியின் செயற்பாடுகள் இந்த வருடாந்த அறிக்கையின் பக்கம் 15இல் காட்டப்பட்டுள்ளது.

## ஊழியர் விவகாரங்களும் தொலைத் தொடர்பும்

ஊழியர்கள் தமது விவகாரம் தொடர்பாக கட்டுப்பாடின்றி குரல் எழுப்புவதற்கும் அவற்றை முகாமைத்துவத்திற்குச் சென்றடையச் செய்வதன் மூலம் தமது மனக்குறைகளை அவ்வப்பொழுது தீர்த்துக் கொள்வதற்கும் சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளனர்.

## சுற்றாடல் ரீதியான பாதுகாப்பு

சுற்றாடல் தொடர்பாகப் பாதகமான விளைவுகளுக்குக் காரணமாயுள்ள எந்தவொரு செயற்பாடுகளிலும் கம்பனி ஈடுபடுத்தப்பட வில்லை என்பதை உறுதிப்படுத்துவதற்கு எல்லா சாத்தியமான மதிப்பீடுகளையும் நாம் எடுத்துள்ளோம். அத்துடன் அது சுற்றாடல் ரீதியான குறிப்பிட்ட விதிகளுக்கு இணக்கப்பாட்டையும் கொண்டுள்ளன.

## அவதானத்துடன் செல்லுதல்

எதிர்கால தீர்க்கதரிசனத்துடன் போதியளவு வளங்களைக் கொண்டுள்ளது என்பதையும் இதன் காரணமாக நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கின்ற பொழுது கம்பனி 'அவதானத்தைச் செலுத்தல்' என்ற கருத்தினைக் கம்பனி பின்பற்றியுள்ளது என்பதையும் பணிப்பாளர் சபை திருப்திப்படுத்துகின்றது.

2011 டிசம்பர் 31ஆம் திகதியன்றுள்ளவாறு கணக்குகளின் கணக்காய்வு செய்யப்பட்ட கூற்றுக்கள் மற்றும் ஐந்தொகை சகிதம் அத்திகதியன்று முடிவடைந்த ஆண்டுக்கான தமது வருடாந்த அறிக்கையைச் சமர்ப்பிப்பதில் பணிப்பாளர்கள் மகிழ்ச்சியடைகின்றனர்.

## 1. கம்பனி செயற்பாடுகள்

கம்பனியின் பிரதான செயற்பாடுகள் புதினப்பத்திரிகை மற்றும் பருவவெளியீடுகளை அச்சிடல், பிரசுரித்தல் மற்றும் விநியோகித்தல் என்பனவாகும். மீளாய்வுக் குட்பட்ட நிதியாண்டின் கீழ் கம்பனியின் பிரதான செயற்பாடுகளின் தன்மையில் முக்கியமான மாற்றங்கள் இடம்பெறவில்லை.

## 2. நிதிக் கூற்றுக்கள்

கம்பனியின் நிதிக் கூற்றுக்கள் இந்த வருடாந்த அறிக்கையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

## 3. கணக்காய்வாளரின் அறிக்கை

நிதிக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளரின் அறிக்கை வருடாந்த அறிக்கையின் பக்கங்கள் வரை கொடுக்கப்பட்டுள்ளது.

## 4. முக்கியத்துவம் வாய்ந்த கணக்கியற் கொள்கைகள்

நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பில் சேர்க்கப்பட்டுள்ள முக்கியத்துவம் வாய்ந்த கணக்கியற் கொள்கைகளின் விபரங்கள் இந்த வருடாந்த அறிக்கையில் கணக்கியற் கொள்கைகளின் கீழ் கொடுக்கப்பட்டுள்ளன.

## 5. இந்த ஆண்டின் மீள்நோக்கு

இந்த நிதியாண்டில் கம்பனியின் செயற்பாடுகளின் மீள்நோக்கு மற்றும் அந்த செயற்பாடுகளின் பெறுபேறுகள் இந்த வருடாந்த அறிக்கையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள தலைவரின் மீள்நோக்கு மற்றும் நிதிசார் மீள் நோக்கில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 6. வருமானம்

2011 டிசம்பர் 31ஆம் திகதி முடிவடைந்த காலப்பகுதியில் கம்பனி மொத்த வருமானம் ரூபா 3,075 மில்லியனைப் பெற்றுள்ளது.

## 7. இலாபம் மற்றும் ஒதுக்கங்கள் (ரூபா. மில்லியன்)

| | 2011 | 2010 |
|---|---|---|
| வரிக்கு முன்னர் இலாபம்/(நட்டம்) | 14 | (359.7) |
| வரி விதிப்பு | (2.1) | (2.8) |
| தாமதித்த வரி விதிப்பு | (22.9) | 25.0 |
| வரிக்குப் பின்னர் இலாபம்/(நட்டம்) | (11.0) | (337.6) |
| முன்கொண்டு செல்லப்பட்ட(நட்டம்)/ இலாபம் | - | (172.8) |
| பங்கிலாபங்கள் | - | - |
| தேங்கிநின்ற இலாபங்கள் கீழ்க் கொண்டுவந்தது | 510.5 | (172.8) |

## 8. வருமான ஒதுக்கங்கள்

2011 டிசம்பர் 31ஆம் திகதியன்று கம்பனியின் வருமான ஒதுக்கம் ரூபா 237.5 மில்லியன் ஆகும்.

## 9. சொத்து, பொறி மற்றும் உபகரணம்

2011ஆம் ஆண்டுக்கான சொத்து, பொறி மற்றும் உபகரணம் தொடர்பான மூலதனச் செலவு மற்றும் மூலதன நடைமுறை வேலை ரூபா 67.8 மில்லியன் ஆகும். இந்த ஆண்டில் சொத்து பொறி மற்றும் உபகரணத்தின் அசைவு நிதிக் கூற்றுக்களின் குறிப்பு 7 இல் கொடுக்கப்பட்டுள்ளது.

## 10. நன்கொடைகள்

இக்காலப்பகுதியில் கம்பனி தரும் ஸ்தாபனங்களுக்கு ரூபா 1,600,000 ஐ வழங்கியுள்ளது.

## 11. ஒரு பங்குக்குரிய தேறிய சொத்துக்கள்

ஒரு பங்குக்குரிய தேறிய சொத்துக்கள் ரூபா 78.17 ஆகும்.

## 12. பங்கு தகவல்

ஒரு பங்குக்குரிய வருமானங்கள், பங்கிலாபங்கள் மற்றும் தேறிய சொத்துக்கள் தொடர்பான தகவல் நிதிசார் கண்ணோட்டம் மற்றும் பத்து ஆண்டுகள் ஒரே பார்வைக் கூற்றுக்களிலும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

பங்குடைமையின் விநியோகம் பங்கு தகவல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது

### 13. கணிசமான பங்குடைமை

இலங்கை அரசின் சார்பாக பொது நம்பிக்கையாளர் 87.5% பங்குகளை வைத்திருக்கின்றது.

### 14. பணிப்பாளர்கள்

2010 டிசம்பர 31ஆம் திகதியன்று கம்பனியின் பணிப்பாளர்கள் மற்றும் அவர்களது பங்குகளும் பின்வருமாறு:

| | பங்குகளின் எண்ணிக்கை |
|---|---|
| திரு. பந்துல பத்மகுமார | இல்லை |
| திரு. சந்திரசேகரம் சண்முகநாதன் | இல்லை |
| திரு. எதிரிசிங்க விதானகே பிரசாத் ரஸங்க ஹரிஸ்சந்திர | 1 |
| திரு. உபுல் ரன்ஜன சமரசிங்க திஸாநாயக்க | இல்லை |
| திரு. சீலரத்ன செனரத் | 1 |

### 15. இந்த ஆண்டில் பதவி விலகல்/ புதிய நியமனங்கள்

இந்த ஆண்டு பதவி விலகல்கள் அல்லது புதிய நியமனங்கள் இடம்பெறவில்லை.

### 16. பணிப்பாளர்களுக்கான கடன்கள்

கம்பனியின் பணிப்பாளர்களுக்குக் கடன்கள் வழங்கப்படவில்லை.

### 17. ஒப்பந்தங்களில் பணிப்பாளர்களின் உரிமை

2011 டிசம்பர் 31ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான கம்பனியுடன் எந்தவொரு ஒப்பந்தம் அல்லது உத்தேசிக்கப்பட்ட ஒப்பந்தத்தில் பணிப்பாளர்களுக்கு நேரடியான அல்லது மறைமுகமான உரிமை இல்லை.

### 18. பணிப்பாளர்களின் ஊதியம்

2011ஆம் ஆண்டுக்காக கம்பனி தொடர்பான பணிப்பாளர்களின் ஊதியம் நிதிக்கூற்றுக்களின் குறிப்பு 2 இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

### 19. பிந்திய ஐந்தொகை நிகழ்வுகள்

2011 டிசம்பர் 31ஆம் திகதியன்றுள்ளவாறு கணக்குகளின் சீராக்கங்கள் செய்வதற்குத் தேவையான எந்தவொரு நிகழ்வும் இடம் பெறவில்லை

### 20. அரச நியதி கொடுப்பனவுகள்

பணிப்பாளர்கள் அவர்களது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டியவரை, அரச மற்றும் ஊழியர்கள் தொடர்பான எல்லா அரச நியதி கொடுப்பனவுகளும் ஒழுங்கான முறையில் செலுத்தப்பட்டுள்ளன என்பதில் திருப்தியடை கின்றனர்.

### 21. அவதானத்துடன் செல்லுதல்

எதிர்கால தீர்க்கதரிசனத்துடன் போதியளவு வளங்களைக் கொண்டுள்ளதுடன், வியாபாரத்தைத் தொடர்ந்து நடாத்தக்கூடிய நிலையில் உள்ளது. கம்பனி 'அவதானத்தைச் செலுத்துதல்' என்ற கருத்தினை நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பின் போது பின்பற்றியுள்ளது என்பதையும் பணிப்பாளர் சபை திருப்தியடைகின்றது.

### 22. சுற்றாடல் ரீதியான பாதுகாப்பு

சுற்றாடல் தொடர்பான பாதகமான விளைவுகளுக்குக் காரணமான எந்தவொரு செயற்பாடுகளிலும் கம்பனி ஈடுபடவில்லை என்பதையிட்டும் சுற்றாடல் ரீதியான குறிப்பிட்ட விதிகளுக்கு இணக்கப்பாட்டைக் கொண்டுள்ளது என்பதனையும் இட்டு பணிப்பாளர்கள் தமது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் அறிந்தவரை திருப்தியடைகின்றனர்.

### 23. கணக்காய்வாளர்கள்

இலங்கை ஜனநாயக சோஷலிஸக் குடியரசின் அரசியலமைப்பின் சரத்து 154 (3) க்கமைய இவ்வாண்டுக்கான கணக்குகள் கணக்காய்வாளர் நாயகத்தினால் கணக்காய்வு செய்யப்பட்டுள்ளன.



பணிப்பாளர் சபையின் கட்டளைப் பிரகாரம்

**குமுது எச். குணவர்தன இம்புலமுரே**
கம்பனிச் செயலாளர்

# நிதிக் கூற்றுக்களுக்கான பணிப்பாளர்களின் பொறுப்பு

நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக பணிப்பாளர்களின் பொறுப்பு கீழ்க்கண்டவாறு விபரிக்கப்படுகின்றது. நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக அவர்களது பொறுப்புக்களை கணக்காய்வாளர்களின் அறிக்கை விளக்குகின்றது.

நிதி ஆண்டின் முடிவுத் திகதியன்று கம்பனியின் உண்மையான நியாயமான விவகாரங்களின் நிலைமைகளைக் கருத்திற் கொண்டு ஒவ்வொரு நிதியாண்டினதும் நிதிக் கூற்றுக்களும் இந்த நிதியாண்டின் வருமானக் கூற்றுக்களும் தயாரிக்கப்பட வேண்டுமென 2007ஆம் ஆண்டு 07ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் கேட்டுக் கொள்கின்றது. இந்தக் கூற்றுக்களைத் தயாரிக்கின்ற பொழுது பின்வருவனவற்றை உறுதிப்படுத்துமாறு பணிப்பாளர்கள் கேட்டுக்கொள்கின்றனர்.

1. உள்ளடங்கல் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள மற்றும் பிரயோகிக்கப்பட்டுள்ள பொருத்தமான கணக்கியற் கொள்கைகள் ஏதேனும் இணைக்கப்பட்ட பொருட்கள் வெளியேற்றம் விபரிக்கப்படுகின்றன.

2. பொருத்தமான சகல கணக்கியற் தரங்களும் பின்பற்றப்பட்டுள்ளன என்பதை உறுதிப்படுத் துதல்.

3. சீராக்கங்கள் மற்றும் மதிப்பீடுகள் நியாயமான வையும் தீர்க்க தரிசனமுடையதென்பதையும் உறுதிப்படுத்துதல்.

4. கம்பனிச் சட்டத்திற்கமைவாக நிதிக் கூற்றுக்கள் கம்பனியின் நிதி நிலைமை நியாயமான சரியான தன்மையையும் போதுமான கணக்கியற் தரங்களைக் கொண்டுள்ளதையும் உறுதி செய்வதற்குப் பணிப்பாளர்கள் பொறுப்பாளிகளாவர். கம்பனியின் சொத்துக்களைப் பாதுகாப்பதற்கும் நியாயமான நடவடிக்கைகளை எடுப்பதற்கும் இலஞ்சம் மற்றும் தவறுகளை விட்டொழிப்பதற்கும் கண்காணிப்பதனையும் கருத்திற் கொண்டு உள்ளக கட்டுப்பாடுகளைப் பாதுகாப்பதற்கும் உண்மையான உறுதிப்பாடுகளினூடாக பொருத்தமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைகளை நிறுவுவதற்கும் கம்பனியின் சொத்துக்களைப் பாதுகாப்பதற்காக நியாயமான நடவடிக்கைகளை எடுப்பதற்கும் அவர்கள் பொறுப்புடையோராவர்.

5. நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கும் கணக்காய்வு அறிக்கையை வழங்குவதற்கும் அவர்களது கணக்காய்வு அறிவை வழங்கும் நோக்கில் பொருத்தமான முறையில் எந்தவொரு நடவடிக்கை எடுப்பதற்கும் பொருத்தமானதாகக் கருதுமிடத்து எந்தவொரு கண்காணிப்பைப் பொறுப்பேற்கும் நடவடிக்கை எடுக்குமாறு பணிப்பாளர்கள் வேண்டப்படுகின்றனர்.

இந்தக் கூற்றிற்கு அமைவாகத் தமது பொறுப்புக்களை நிறைவேற்றியுள்ளனர் என்பதை பணிப்பாளர்கள் கருத்திற் கொள்ளுதல் வேண்டும்.

சகல நிதி அறிக்கைகள் சம்பந்தப்பட்ட தரவு மற்றும் பங்குதாரர்கள் மற்றும் பணிப்பாளர்களின் கூட்ட அறிக்கைகள் மற்றும் வருடாந்த அறிக்கையின் பக்கத்தில் தமது அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள கருத்துக்களுடன் பணிப்பாளர் சபையினால் கிடைக்கச் செய்துள்ள நிதிக் கூற்றுக்கள் கம்பனியின் கணக்காய்வாளர்கள் பரிசீலனை செய்துள்ளனர் என்பதைக் கணக்காய்வாளர் நாயகம் உறுதிப்படுத்தல் வேண்டும்.

சபையின் கட்டளைப் பிரகாரம்

**தி. அஸோசியேட்ட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடெட்**



**குமுது எச். குணவர்தன இம்புலமுரே**

**கம்பனிச் செயலாளர்.**

# கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

2012 ஆகஸ்ட் 31

**தலைவர்**
**வரையறுக்கப்பட்ட இலங்கை அசோசியேட்டற் நியூஸ் பேப்பர்ஸ் கம்பனி**

## வரையறுத்த இலங்கை அசோசியேட்டற் நியூஸ் பேப்பர்ஸ் கம்பனியின் 2011 திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1971இன் 38ஆம் இலக்க நிதியதிகார சட்டத்தின் 14(2)(சீ)ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

வரையறுத்த இலங்கை அசோசியேட்டற் நியூஸ் பேப்பர்ஸ் கம்பனியின் 2011 திசெம்பர் 31இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக்கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசோட்டக்கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புக்களையும் ஏனைய விளக்கத்தகவல்களையும் உள்ளடக்கிய 2011 திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971இன் 38ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(1)ஆம் பிரிவு மற்றும் 1973இன் 28ஆம் இலக்க வரையறுத்த இலங்கை அசோசியேட்டற் நியூஸ் பேப்பர்ஸ் கம்பனிச் சட்டத்தின் 16ஆம் பிரிவு (விசேட ஏற்பாடுகள்) என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும். இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3)ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ)ஆம் பிரிவின் பிரகாரம் அதிகார சபையின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச் சட்டத்தின் 13(7)(ஏ)ஆம் பிரிவின் பிரகாரம், ஒரு விபரமான அறிக்கை 2012 யூன் 08ஆந் திகதி கம்பனியின் தலைவருக்கு வழங்கப்பட்டது.

### 1.2 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமனங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்து மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயரிப்பதற்கு அவசியமானதென முகாமை நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமை பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமனங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளினை கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கம்பனியினால் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்வாரேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் தொடர்பாக அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில் கொள்ளப்படவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீட்டுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலின் மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971இன் 38ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13ஆம் பிரிவின் (3) மற்றும் (4)ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும், பரப்பினையும், நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவு பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்று

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து வரையறுத்த இலங்கை அசோசியேட்டற் நியூஸ் பேப்பர்ஸ் கம்பனியினது 2011 திசெம்பர் 31இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை கணக்கீட்டு நியமம்

இலங்கை கணக்கீட்டு நியமம் 18இன் 30ஆம் பிரிவின் பிரகாரம் முழுமையாக பெறுமானத் தேய்வு செய்யப்பட்ட ஆனால் பயன்பாட்டில் உள்ள மோட்டார் வாகனங்கள், இயந்திரங்கள், கணனிகள் மற்றும் மின்சார பொருத்திகள் என்பன மீள்மதிப்பீடு செய்யப்பட்டு கணக்குகளில் பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.2 கணக்கீட்டு குறைப்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) நிதிக்குத்தகையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட கணனிகளிற்காக ரூபா 4,167,848 தொகையான தவணைப் பணக்கொடுப்பனவு செய்யப்பட்டு முடிவடைந்திருந்த போதும் அது இறையில் சொத்துகளுக்கு மாற்றப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வெளிநாட்டுக் கடன்பட்டோரால் விளம்பரங்களை பிரசுரிப்பதற்காக செய்யப்பட்டிருந்த வைப்புகளில் ரூபா 1,522,392 கூட்டுத்தொகையான மீதிகளை பொறுப்புகளின் கீழ் முற்பணமாக காண்பிக்கப்படுவதற்குப் பதிலாக வியாபாரக் கடன்பட்டோருக்கு எதிராக சரி செய்யப்பட்டிருந்தது.

(இ) அச்சிடல் வேலைகளுக்காக கம்பனியின் வர்த்தக அச்சகத் திணைக்களத்திற்கு முற்பணமாக இலங்கை இராணுவத்தால் வழங்கப்பட்டிருந்த ரூபா 1,331,868 முற்பணத் தொகையை பொறுப்புக்களின் கீழ் செலுத்த வேண்டிய முற்பண கொடுப்பனவாக காண்பிப்பதற்குப் பதிலாக கடன்பட்டோரின் கீழ் செலவு மீதியாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) விளம்பரக் கடன்பட்டோரில் உள்ளடக்கப்பட்டிருந்த ரூபா 19,863,773 கூட்டுத்தொகையான செலவு மீதிகளை பொறுப்பின் கீழ் காண்பிப்பதற்குப் பதிலாக அந்தக் கணக்கின் மொத்த வரவு மீதிகளுக்கு எதிராக சரி செய்யப்பட்டிருந்தது.

(உ) விரிவாக வருமானம் மற்றும் செலவினக் கணக்கில் காண்பிக்கப்பட்டிருந்த வர்த்தக அச்சுத் திணைக்களத்தின் வெளியக வேலைத்தள கிரயத்தின் கணிப்பீடு உள்ளக வேலைக்கான எல்லை வருமானம் உட்பட இலாபம், திணைக்களத்தின் மொத்த உற்பத்திக்கான செலவினத்திலிருந்து கழிக்கப்பட்டிருந்தது.

(ஊ) வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனத்தில் முதலீடு செய்யப்பட்ட ரூபா 300,000 தொகையை தவறுதலாக விலைகூறப்படாத கம்பனிகளின் கீழ் வகைப்படுத்தப்பட்டிருந்தது.

(எ) வரையறுத்த இலங்கை அசோசியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் கம்பனி 2008ஆம் ஆண்டில் ‘‘லங்கா புவத்’’ கம்பனியின் ஒவ்வொன்றும் ரூபா 1,000 ஆன 2400 பங்குகளைக் கொள்வனவு செய்வதற்கு ரூபா 1.2 மில்லியன் தொகையை முற்பணமாக செலுத்தியிருந்தது. இதனை நிதிக்கூற்றுக்களில் முதலீடாகக் காண்பிப்பதற்குப் பதிலாக முற்பணமாகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஏ) 1999ஆம் ஆண்டுடன் தொடர்புடைய ரூபா 8,652,936 தொகையிலான வழியில் சரக்குகள் தொடர்பாக அவசியமான சீராக்கங்களையும் மேற்கொள்ளாமல் தொடர்ந்தும் நானாவிதக் கடன்பட்டோரின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஐ) நான்கு விரிவாக்கல் இயந்திரத்திற்குச் செலுத்த வேண்டிய ரூபா 2,364,780 தொகையை 2011 திசெம்பர் 31 வரையில் கணக்குகளுக்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை. ஆதலால் சொத்துக்களும் பொறுப்புக் கணக்குகளும் அப்பெறுமதியால் குறைத்துக்காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஒ) கம்பனியின் பெயரில் காணப்படும் ரூபா 309,627 கூட்டுப் பெறுமதியான இரண்டு நிலையான வைப்புக்கள் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 கணக்கிணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2011 திசெம்பர் 31இல் உள்ளவாறான கடன்பட்டோர் பேரேட்டு மீதி ரூபா 15,861,472 ஆக இருந்தது. விரிவான பட்டோலைகளின் பிரகாரம் அது ரூபா 11,110,942 ஆக இருந்தது. எனவே ரூபா 4,750,530 தொகையான வேறுபாடு சீராக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.4 இனங்காணப்படாத வேறுபாடுகள்

‘‘எடிப்பரோ’’ முறையான நாளாந்த பெறுவனவுகளின் போதும் வங்கியில் பணத்தை வைப்புச் செய்யும் போதும் அவதானிக்கப்பட்ட ரூபா 85,020 தொகை மிகை மற்றும் ரூபா 137,854 தொகையான குறைவுகள் தொடர்பாக எவ்வித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளாமல் 2011 திசெம்பர் 31இல் வங்கிக் கணக்கிணக்கக் கூற்றில் நிலுவையாக முறையே வரவிலும் செலவிலும் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 2.2.5 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) பொருட்களையும் சேவைகளையும் கொள்வனவு செய்வதற்காக வழங்கப்பட்ட ரூபா 2,105,423 கூட்டுத்தொகையான முற்பணம் 01 முதல் 07 ஆண்டுகள் வரையிலான வீச்சில் நிலுவையாக இருந்தது.

(ஆ) 2011 திசெம்பர் 31இல் புதினப் பத்திரிகை முகவர் கடன்பட்டோரில் உள்ளடக்கப்பட்ட ரூபா 2,631,559 தொகையான கடன்பட்டோர் இருந்தது.

(இ) 2011 திசெம்பர் 31இல் உள்ளவாறு புதினப்பத்திரிகை முகவர் கடன்பட்டோர் உள்ளடக்கப்பட்டிருந்த முறிவடைந்த கடன்பட்டோர் ரூபா 9,661,338 ஆனதுடன் ரூபா 5,324,376 மீதி அல்லது மேற்படி கடன் தொகையில் 55% ஒரு ஆண்டு நிறைவடைவதற்கு முன் முறிவடைந்திருந்தது. எவ்வாறாயினும் இது தொடர்பாக நிறுவனத்தினால் எவ்வித சட்ட நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஈ) வர்த்தக அச்சுத் திணைக்களத்தின் கடன்பட்டோரின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்த ரூபா 654,758 தொகை இரண்டு வருட காலமாகத் தீர்க்கப்படாமல் இருந்தது. மேற்படி கடனில் ரூபா 135,735 அசைவற்ற மீதியாக இருந்தது.

(உ) ரூபா 50,000 இற்கு மேற்பட்ட வியாபார கடன்பட்டோர் மீதி தொடர்பாக ரூபா 515,777,384 இற்காக உறுதிப்படுத்தல் கடிதங்கள் வியாபாரக் கடன்பட்டோருக்கு அனுப்பப்பட்டிருந்தது. ரூபா 20,884,706 தொகைக்கான மீதி ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்ததுடன், ரூபா 6,738,388 இற்கான உறுதிப்படுத்த கடிதங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அத்துடன் 2012 யூன் 29 வரை ரூபா 488,154,290 இற்கான உறுதிப்பாட்டுக் கடிதங்கள் கிடைத்திருக்கவில்லை.

(ஊ) விளம்பரங்களுக்கான கடன் செலுத்த வேண்டிய காலம் 50 நாட்கள் ஆகும். 4% ஆன விளம்பரங்களுக்கான தேறிய கடன் மீதி ஒரு ஆண்டை விஞ்சியனவாக இருந்ததுடன், மொத்தம் ரூபா 2,580,486 ஆன தொகை அரசாங்க திணைக்களங்கள் மற்றும் அமைச்சுக்களில் இருந்து கிடைக்க வேண்டியனவாக இருந்தன. மேலும், அரச மற்றும் தனியார் நிறுவனங்களில் இருந்து 720 நாட்களைத் தாண்டியிருந்த ரூபா 5,421,207 கடன் மீதி ஆகும்.

(எ) 2008ஆம் ஆண்டிற்குரிய நானாவித கடன் கொடுத்தோர் மீதியில் ரூபா 982,363 பெறுமதியான இனங்காணப்படாத வைப்பு காட்டப்பட்டிருந்தது. அவற்றை இனங்கண்டு கணக்குகளில் சீராக்கம் செய்யப்படாமல் சில்லறைக் கடன் கொடுத்தோராக கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

(ஏ) நிறுவனத்திற்கு கடன் அடிப்படையில் அச்சுத் தாள்கள் வழங்கியதற்காக 2011 திசெம்பர் 31இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய ரூபா 20,472,394 பெறுமதியான தொகை 2 ஆண்டுகளாக நிலுவையாக இருந்தது.

(ஐ) பொருள் மாற்றீடு அடிப்படையில் 2010 ஜனவரி மற்றும் பெப்ரவரி மாதங்களில் லக்பிம நிறுவனத்திற்கு 199,798 கிலோகிராம் அச்சுத்தாள்கள் வழங்கப்பட்டிருந்தது. ஆயினும், 2011 திசெம்பர் 31ஆம் திகதி வரையில் மேற்குறித்தவற்றில் 104,388 கிலோ கிராம் மட்டும் மீள கிடைக்கப் பெற்றிருந்தது. அதன் பிரகாரம் 2012 யூன் 29ஆம் திகதி வரையில் ரூபா 6,821,487 பெறுமதியான 95,410 கிலோகிராம் அச்சுத்தாள்கள் மீளக் கிடைக்கப்பெறவில்லை.

(ஒ) ரூபா 18,343,239 பெறுமதியான 130 திரும்பிய காசோலைகளிற்காக முறையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதில் ரூபா 1,814,872 பெறுமதியான 67 காசோலைகள் ஓராண்டிற்கும் மேலாக நிலுவையாக இருந்தன.

### 2.2.6 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்த ரூபா 6,374,634 பெறுமதியான 07 வாகனங்கள், பௌதீக ரீதியான மெய்மையாய்வு அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படாமையால் கணக்காய்வில் திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியவில்லை.

### 2.2.7 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் முதலியவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 1971இன் 38ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் (i) 13(8)ஆம் பிரிவு | அதிகாரச் சட்டத்தின் 13(7)(அ) பிரிவின் பிரகாரம் 2010ஆம் ஆண்டிற்கான விநியோகிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்காக எடுக்கப்பட்ட படிமுறைகள் குறிப்பிடுகின்ற பதில்கள் கம்பனி சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) 14(1)ஆம் பிரிவு | மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களுடன் சேர்த்து வரைவு ஆண்டறிக்கையின் ஓர் பிரதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| | (iii) 13(5)(டி) | அரையாண்டிற்கு ஒரு முறை உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. |
| (அ) | 2006இன் 10ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 114(1)ஆம் பிரிவு மற்றும் 2003 யூன் 02ஆம் திகதிய பீஈடீ/12ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை 8.7ஆம் பிரிவு | தொழிலாளர்களின் மிகையூதியக் கொடுப்பனவிலிருந்து உழைக்கும் போது செலுத்தப்பட வேண்டிய வரியைக் கழிக்காமல் அதனை கம்பனி செலுத்தியிருந்தது. 2010/2011ஆம் ஆண்டிற்காக ரூபா 12,481,683 ஆன தொகை செலுத்தப்பபட்டிருந்தது. |
| (இ) | 2003 யூன் 02ஆம் திகதிய பீஈடீ/12ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை (i) 9.2(ஆ) மற்றும் (ஈ) பிரிவு | அமைப்பு வரைபடத்திற்கும் அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்கும் பொது முயற்சிகள் திணைக்களத்திடமிருந்து அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும், இதுவரை அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) 9.2ஆம் பிரிவு | கம்பனியின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி கூட்டுத்திட்டத்தில் உள்ளடக்கப்பட வேண்டும். இருந்த போதிலும், 2006 முதல் 2015 வரையான ஆண்டிற்காக தயாரித்த கூட்டுத்திட்டத்தில் 2006 யூலை 31இல் உள்ளவாறான அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் விபரங்கள் காண்பிக்கப்பட்டிருந்தன. |

### 2.2.8 சர்ச்சைக்குரிய தன்மையான விடயங்கள்

உரிய நிறுவனங்கள் அல்லது நபர்களிடமிருந்து முறையாக கட்டளை பெற்றுக்கொள்ளாமல் கம்பனியின் வர்த்தக அச்சுத் திணைக்களத்தினால் ரூபா 15,054,600 பெறுமதியான பத்து அச்சு வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. மேலும் ரூபா 6,074,600 தொகையான வேலைகளுக்கான கட்டணங்களை அறவிடுவதற்கு கம்பனியால் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. மேற்குறித்த வேலைகள் மற்றும் ரூபா 7,980,000 தொகையான இன்னொரு மூன்று வேலைகள் எவ்வித அடிப்படையும் இல்லாமல் விற்பனை மேம்படுத்தல் கணக்கிற்கு எதிராக பதிவழிக்கப்பட்டிருந்தது.

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2011 திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டிற்காக கம்பனியின் செயற்பாட்டு விளைவு வரிக்கு முந்திய தேறிய இலாபம் ரூபா 14,036,475 ஆக இருந்ததுடன், எதிராக முன்னைய ஆண்டிற்கான வரிக்கு முந்திய தேறிய நட்டம் ரூபா 359,781,998 ஆகக்காணப்பட்டது. ஆதலால் நிதிசார் விளைவுகளில் ரூபா 373,818,473 தொகையான அதிகரிப்பு காணப்பட்டதுடன், செலவினங்கள் ரூபா 228,489,987 ஆல் வீழ்ச்சியடைந்தமையும் வருமானங்கள் ரூபா 145,328,486 அதிகரித்தமையும் மீளாய்வாண்டிற்கான நிதிசார் விளைவுகளிலுள்ள அதிகரிப்பதற்கு பிரதான காரணமாக இருந்தது.

### 3.2 பகுப்பாய்வு ரீதியான நிதிசார் மீளாய்வு

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடப்பட்டு மீளாய்வாண்டிற்கான கம்பனியின் மொத்த இலாப எல்லை மற்றும் இலாபம் என்பன முறையே 1.95 சதவீதம் மற்றும் 7.63 சதவீதத்தால் அதிகரித்திருந்ததுடன், ஊழியர்கள் சுயவிருப்பில் ஓய்வுபெறல் கிரயம் 176 மில்லியனால் வீழ்ச்சியடைந்திருந்தது. இதன் விளைவாக, முன்னைய ஆண்டில் ஏற்பட்ட வரிக்கு முன்னரான தேறிய நட்டம் மீளாய்வாண்டில் ரூபா 14 மில்லியன் வரிக்கு முந்திய தேறிய இலாபமாக மாறியிருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடப்பட்டு நிதிக்கூற்றுக்களின் பகுப்பாய்வு செய்யப்பட்ட மீளாய்வில் கண்டறியப்பட்ட சில விடயங்கள் கீழே தரப்படுகின்றன.

| | 2011 % | 2010 % |
|---|---|---|
| மொத்த இலாப எல்லை | 50.42 | 48.47 |
| இலாபப் புள்ளி (விற்பனை கிரயத்தின் மீது மொத்த இலாபம்) | 101.69 | 94.06 |
| விற்பனைப் புரள்வு மீதான நிர்வாகச் செலவினம் | 40.00 | 45.19 |
| விற்பனைப் புரள்வு மீதான விற்பனை விநியோகச் செலவு | 10.14 | 10.95 |
| விற்பனைப் புரள்வு மீதான நிதிச்செலவு | 3.63 | 2.42 |
| திரவ விகிதம் | 1.44:1.00 | 1.46:1.00 |
| விரைவு விகிதம் | 0.95:1.00 | 1.04:1:00 |

# 4. செயற்பாட்டு மீளாய்வு

## 4.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் போது கம்பனி 06 புதினப் பத்திரிகைகள், 12 சஞ்சிகைகள் மற்றும் 2 வருடாந்த வெளியீடுகள் என்பவற்றின் பதிப்புச் செய்திருந்தது. அத்துடன் முன்னைய ஆண்டில் 6 பத்திரிகைகளையும் 7 சஞ்சிகையும் 11 வருடாந்த வெளியீடுகளையும் பதிப்புச் செய்திருந்தது. மீளாய்வாண்டின் போது புதினப் பத்திரிகை மற்றும் பருவ வெளியீடுகள் மற்றும் வருடாந்த பதிப்புக்களுக்குமான தேறிய பங்களிப்பு ரூபா 179,311,948ஆல் அதிகரித்திருந்தது.

(ஆ) கம்பனியால் வெளியிடப்படுகின்ற ஆறு பத்திரிகைகளிலிருந்த கம்பனியின் நிதிசார் விளைவுகளுக்கு சாதகமான பங்களிப்புச் செய்துள்ளது. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

(i) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது கம்பனியின் பத்திரிகைகளிலிருந்தான ஒட்டுமொத்த விளம்பர வருமானம் ரூபா 253,503,962 ஆல் அல்லது 12.7 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. அதே நேரம் 2011 ஒக்தோபர் 01 இலிருந்து விளம்பரக் கட்டணங்கள் 31.5 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

(ii) கம்பனியின் ஒட்டுமொத்த பத்திரிகை விற்பனை வருமானம், முன்னைய ஆண்டில் ரூபா 474,808,907 இலிருந்து மீளாய்வாண்டின் போது ரூபா 496,505,606 வரை 4.57 சதவீதத்தால் ஆல் அதிகரித்திருந்தது. மீளாய்வாண்டின் போது 3 பத்திரிகைகளின் விலை 25 சதவீதத்தால் ஆல் அதிகரிக்கப்பட்டது.

(iii) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது விளம்பர வருமானம் மற்றும் பத்திரிகை விற்பனை வருமானம் என்பன குறைவடைந்தமையால் சிலுமினவின் தேறிய பங்களிப்பு ரூபா 34,731,985 ஆல் வீழ்ச்சியடைந்திருந்தது.

## 4.2 முகாமைத்து திறமையீனங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) கம்பனியின் உத்தியோகத்தர் ஒருவருக்கு வறட்சி நிவாரண நிகழ்ச்சித் திட்ட அமுலாக்கலிற்காக ரூபா 250,000 முற்பணத்தொகை 2004 செப்தெம்பர் மாதம் வழங்கப்பட்டது. அந்த உத்தியோகத்தர் இப்போது வரை பதவியில் இருந்த போதிலும், இதுவரை அம்முற்பணத்தொகை தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 1985ஆம் ஆண்டிலிருந்து வரையறுக்கப்பட்ட லேக் ஹவுஸ் ஆதன அபிவிருத்தி கம்பனியில் முதலீடு செய்யப்பட்டிருந்த ரூபா 7,500,000 தொகைக்காக மீளாய்வாண்டு வரையில் எவ்வித பிரதிபலனும் கிடைக்கப்பெற்றிருக்கவில்லை.

### 4.3 செயற்பாட்டு திறமையீனங்கள்

2011ஆம் ஆண்டிற்கான செயற்பாட்டுத் திட்டத்திற்கமைய, வர்த்தக அச்சகத் திணைக்களத்தின் பிரதான நோக்கம் அதன் வருமானத்தை அதிகரிப்பதும், அதன் வெளி வருமானத்தினை 55% இனால் அதிகரிப்பதும், உள்ளக வருமானத்தை 45% இனால் அதிகரிப்பதும் ஆகும். எவ்வாறாயினும், மீளாய்வாண்டிற்கான பாதீடு செய்யப்பட்ட வருமானத்துடன் ஒப்பிடும் போது உள்ளவாறான வருமான பாதீடு செய்யப்பட்ட வருமானத்தின் 71% அடையப் பெற்றிருந்ததுடன், உழைக்கப்பட்டிருந்த 70% வருமானம் உள்ளக வருமானமாகவும் 30% வெளியக வருமானமாகவும் இருந்ததென அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் கம்பனி இலக்கிடப்பட்ட வெளியக வருமானத்தை அடையப்பெறவில்லை.

### 4.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2011ஆம் ஆண்டில் கம்பனியின் இயக்குனர் சபை, பயன்படுத்தப்படாத ஏழு வாகனங்களை கைதவிர்ப்பதற்கு தீர்மானித்திருந்ததுடன், மூன்று வாகனங்கள் மட்டும் கைதவிர்க்கப்பட்டிருந்தது. 2011 திசெம்பர் வரையில் எஞ்சிய 4 வாகனங்களும் பயன்படுத்தப்படாத சொத்துக்களாக காணப்பட்டன. அவ்வாகனங்களின் கிரயம் ரூபா 3,737,812 ஆக இருந்தது.

(ஆ) ரூபா 71,991 பெறுமதியான பயன்படுத்தப்படாத அப்பியாச புத்தக இருப்புக்கள் கண்டி கிளை அலுவலக புத்தகசாலையில் இருந்தமை அவதானிக்கப்பட்டன.

(இ) 147 வகையான கமெரா மற்றும் ஏனைய உபகரணங்கள் புகைப்பட சேவைகள் திணைக்களத்தினால் கைதவிர்ப்பதற்கு எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படாமல் இருந்தது. உபகரணங்களின் பெறுமதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

### 4.5 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2010ஆம் ஆண்டு கல்வி வெளியீட்டுத் திணைக்களத்திற்கு ரூபா 203,421,900 பெறுமதியான 24 பாடவிதானப் புத்தகங்களை அச்சிடல் தொடர்பில் தாமதமாகவும் தரம் குறைவாகவும் அச்சிட்டமைக்கான தண்டப்பணமாக ரூபா 1,070,242 ஆன தொகை மீளாய்வாண்டில் செலுத்தப்பட்டிருந்தது. முன்னைய ஆண்டுகளிலும் இதேபோல் ரூபா 4,799,532 ஆன தொகை தண்டப்பணமாக செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) விசேட மற்றும் பொதுக் காரணங்களுக்காக வெளியீட்டுப் பிரிவினால் திருப்பியனுப்பப்பட்ட செய்தித்தாள்களை கம்பனி மீளப்பெற்றுக் கொண்டிருந்ததுடன், விற்பனைப் பிரதிநிதிகளுக்கு விநியோகிக்கப்பட்ட செய்தித்தாள்களில் எஞ்சியவை எவ்வித வரையறையுமின்றி மீளப்பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தன. 2011ஆம் ஆண்டு ஜனவரி தொடக்கம் மே வரை விற்பனை பிரதிநிதிகளுக்கான விசேட மீளப்பெற்றுக்கொள்ளல் தொடர்பான ஆலோசனை சுருக்கத்தை கணக்காய்வுப் பரிசோதனைக்கு உட்படுத்திய போது, 90% ஆன மீளளிப்புக்கள் வியாபார மேம்படுத்தல் செயற்பாட்டிற்காக கம்பனியால் கூடுதலாக அனுப்பிய பத்திரிகைகள் என்பன வெளிப்படுத்தப்பட்டது.

### 4.6 காசு முகாமைத்துவம்

கம்பனியால் 2011 திசெம்பர் மாதம் தயாரிக்கப்பட்டிருந்த வங்கிக் கணக்கிணக்க கூற்றின் பகுபாய்வின் பிரகாரம் ஆறு மாதங்களுக்கு மேற்பட்ட காலமாக இணக்கம் செய்யப்படாத முறையே ரூபா 1,822,226 மற்றும் ரூபா 803,287 பெறுமதியான இனங்காணப்படாத வரவு மீதிகளும் செலவு மீதிகளும் சீராக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.7 இனங்காணப்பட்ட நட்டங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் போது கம்பனி ஒவ்வொரு பத்திரிகை மற்றும் சஞ்சிகை என்பவற்றை அச்சிடப்படுவதற்கான கட்டளைகளில் காண்பிக்கப்பட்டிருந்த எண்ணிக்கையினை விஞ்சி 2,506,449 பிரதிகள் பத்திரிகைகளும் சஞ்சிகளும் அச்சிடப்பட்டிருந்தன. மேலும் அச்சிடலின் போது நல்ல கடதாசியின் 5% மட்டுமே பழுதடைந்த கடதாசிகளாக அங்கீகரிக்கப்பட்டிருந்தன. எனினும் மீளாய்வாண்டின் போது நல்ல கடதாசி மற்றும் பழுதடைந்த கடதாசி என்பவற்றை ஒப்பிடும் போது சில சந்தர்ப்பங்களின் போது அனுமதிக்கப்பட்ட எல்லை மிகைத்திருந்தது. மீளாய்வாண்டின் போது நல்ல பிரதிகளை வழங்கியதன் பின்னர் எஞ்சிய பத்திரிகைகள் மற்றும் சஞ்சிகைகள் என்பவற்றின் மீதி 858,813 ஆக இருந்தது. அவற்றின் கிரயம் அண்ணளவாக ரூபா 18,403,595 ஆக இருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் போது தேசிய சேமிப்பு வங்கியிடமிருந்து அறவிடப்பட வேண்டியதாக காட்டப்பட்ட ரூபா 5,432,000 தொகையை எந்த அடிப்படையுமின்றி விற்பனை மேம்படுத்தல் செலவினக் கணக்கிற்கு மாற்றப்பட்டிருந்தது.

### 4.8 கம்பனியின் வளங்கள் ஏனையோர் பயன்படுத்துதல்

2003 யூன் 02ஆம் திகதிய பீஈடீ/12ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 8.3.9ஆம் பிரிவிற்கு முரணாக கம்பனியின் ஐந்து உத்தியோகத்தர்கள் வெளி நிறுவனங்களுக்கு விடுவிக்கப்பட்டிருந்தனர். அத்துடன் கம்பனி மீளாய்வாண்டின் போது அவர்களிற்கான சம்பளமாக ரூபா 1,103,112 தொகையை செலவிடப்பட்டிருந்தது.

## 5. கணக்களிப்பு தன்மையும் நல்ல ஆளுகையும்

### 5.1 ஆண்டறிக்கையை முன்வைத்தல்

கம்பனி 2010ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கையை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்திருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளில் அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வப்போது கம்பனியின் தலைவரது கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது,

(அ) முற்பணத் தீர்ப்பனவு

(ஆ) கிளை அலுவலகங்களின் நிதிக் கட்டுப்பாடு

(இ) வர்த்தக அச்சீட்டுத் திணைக்களத்தில் வேலை பதிவேடுகளின் பராமரிப்பு

**ஒப்பம் : எச்.ஏ.எஸ். சமரவீர**

கணக்காய்வாளர் தலைமை அதிபதி

## 2.2 கணக்குகள் தொடர்பான அபிப்பிராயங்கள்

### 2.2.1 இலங்கை கணக்கியற் தரங்கள்

இந்த அபிப்பிராயத்திற்கு நாம் இணங்குவதில்லை. இலங்கை கணயக்கியற் தரங்கள் 18இன் விதிகளுக்கமைய ஒரு நிறுவனம் நிதிசார் கூற்றுக்களிலுள்ள சொத்துக்களின் பின் தொடர்கின்ற அங்கீகாரத்துக்காக செலவு மாதிரி அல்லது மீள் மதிப்பீட்டு மாதிரி என்பவற்றில் ஒன்றைப் பின்பற்ற முடியும். ஏஎன்சிஎல் கணக்குகளுக்கான குறிப்புகளில் ஒழுங்காகச் சேர்க்கப்பட்டுள்ள செலவு மாதிரியைத் தேர்ந்தெடுக்கின்றது.

### 2.2.2 கணக்குகளில் குறைபாடுகள்

அ) ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இந்தக் கணனிகளை நாம் தவறுதலாக சுயேச்சையாக வைத்திருக்கும் சொத்துக்களுக்குப் பதிலாக குத்தகை சொத்துக்களாக வகைப்படுத்தியுள்ளோம். இந்த நிலைமை 2012இல் திருத்தப்படவுள்ளது.

ஆ) 2012 நிதிக் கூற்றுக்களில் முன்வைக்கப்படும் தவறுகளை சீராக்கல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

இ) இதனை சீராக்கல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

ஈ) வர்த்தக அச்சிடல் பகுதி, உள்ளக மற்றும் வெளிவாரி தொழில்களுக்குப் பிரத்தியேகமாக தொழில் அட்டைகளை நிருவகித்து வருகின்றது. விவரமான வருமானம் மற்றும் செலவினக் கணக்குகளுக்கான அட்டவணை 11 வர்த்தக அச்சிடல் பகுதியின் வெளிவாரியான மற்றும் உள்ளக வருமானத்தையும் எதிரிடையான விற்பனைச் செலவுகளையும் தெளிவாகக் காட்டுகின்றது.

உ) இந்த வகைப்படுத்தல் தவறு அடுத்து ஆண்டின் நிதிக் கூற்றுக்களில் திருத்தப்படவுள்ளது.

ஊ) இணைய பிரசுரம் போன்ற ஏனைய ஊடக முறைகளில் பங்கை உயர்த்துவதற்கு லங்கா புவத் லிமிட்டெடின் 2400 பங்குகளைப் பெற்றுக்கொள்வதற்கு முன்பணக் கொடுப்பனவு ரூபா 1.2 மில்லியன் செலுத்தப்பட்டுள்ளது. மிகுதியைச் செலுத்துவதற்கும் குறுகிய காலத்தில் குறிப்பிட்ட பங்கு சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்வதற்கும் நாம் மதிப்பீடுகளை எடுக்கவுள்ளோம்.

எ) பிழையான கணக்கு காரணமாக எழுந்துள்ள சில்லறைக் கடன்பட்டோர் மிகுதி சபையின் அங்கீகாரத்துடன் 2012இல் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

ஏ) இது 2012 கணக்குகளில் திருத்தப்படவுள்ளது.

ஐ) இந்த இரண்டு நிலையான வைப்புக்களும் ஆணையிரவில் நாட்டுக்காக தனது உயிரை அர்ப்பணித்த படை வீரரின் பெற்றோர்களின் நலனை உறுதிப்படுத்துவதற்கு உருவாக்கப்பட்ட ''ஹசலக்க படை வீரர் நிதிய''த்திற்குச் சொந்தமானதாகும். வைப்புக்கள் நிதியத்தின் பெயரிலே உள்ளன. அத்துடன் ஏஎன்சிஎல்இன் பெயரில் அல்ல.

### 2.2.3 இணைக்கப்பாடற்ற கட்டப்பாட்டு கணக்குகள்

கணனி செயற்பாடு அறிமுகப்படுத்தல் காரணமாகவே இந்த வேறுபாடு அவதானிக்கப்பட்டுள்ளது. புதிய செயற்திட்டம் முழுமையாக அறிமுகப்படுத்தப்படுகின்ற போது சீராக்கல் செய்யப்படும்.

2.2.4 இனங்காணப்படாத வேறுபாடுகள்

இனம் காணப்படாத வரவுகள் மற்றும் செலவுகளைப் பொருத்தமான முறையில் கணக்கிடுவதற்கு நடவடிக்கை எடுக்கபடவுள்ளது.

2.2.5 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

அ) கணக்காய்வு விசாரணையின் பலனாக சில முற்பணங்கள் அறவிடப்பட்டு/ செலுத்தி தீர்க்கப்பட்டுள்ளன. மற்றும் சில சபையின் அங்கீகாரத்துடன் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளன. தற்பொழுது செலுத்தித் தீர்க்க வேண்டிய மிகுதி ரூபா 782,567/92 ஆகிய தொகை 2005 - 2008 ஆண்டுகளுக்கிடையிலான கொள்வனவுகளைக் குறிப்பிடுகின்றது. 2012இல் ஒழுங்காக கணக்கிடப்படவுள்ளது.

ஆ) இந்த தொகை ரூபா 2,631,559/- பிணையாக ஏழு வாரங்கள் விநியோகப் பெறுமதியை வைப்புச் செய்துள்ள ஒழுங்காக நியமிக்கப்பட்ட நிரந்தமான செய்தி முகவர்களிடமிருந்து செலுத்தித் தீர்க்க வேண்டிய தொகையாகும். ஒழுங்கற்ற கடன் தீர்த்தல் காரணமாக இந்தத் தரப்பினரின் செய்தி முகவர் நிலைய நிலைமையை நாம் தற்காலிகமாக இடைநிறுத்தியுள்ளோம். அத்துடன் மிகுதிகள் முழுமையாக அறவிடப்படுகின்ற போது கொடுக்கல் வாங்கல்கள் மீளவும் ஆரம்பிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

இ) இந்த முகவர் நிலையங்களின் இறுதிக் கணக்குகளைப் பூர்த்தி செய்கின்ற செயற்பாட்டை நாம் செய்து வருகின்றோம். அவற்றின் வைப்புக்களில் எத்தொகைக்கும் சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு எதிர்பார்க்கின்றோம்.

ஈ) இரண்டு வருடங்களுக்காக 12 கடன்பட்டோர்களிடமிருந்து அறவிடக்கூடிய தொகை 135,735/- ஆண்டு 2012இல் தள்ளுபடி செய்யப்படும்.

உ) கணக்காய்வு உத்தியோகத்தர்களினால் சம்மதிக்கப்பட்டது போன்று ரூபா 50,000/- இற்கு மேற்பட்ட கடன்பட்டோர்களுக்கு ஏஎன்சிஎல் உறுதிப்படுத்தல் கடிதங்களை அனுப்பியுள்ளது. எவ்வாறாயினும் சில கடன்பட்டோர் மாத்திரம் தக்கவாறு இயங்கியுள்ளனர். அத்துடன் இந்த நிலைமை எமது கட்டுப்பாட்டைத் தாண்டிச் சென்றுள்ளது. 28 கடன்பட்டோர் மாத்திரம் இணங்கவில்லை மற்றும் வேறுபாடுகள் மிகச் சிறிதளவாகக் காணப்பட்டது.

ஊ) புதினப்பத்திரிகைத் துறையில் மிக உயர்வான போட்டி நிலைமை நிலவுவதனால் ஏஎன்சிஎல் அரசாங்க மற்றும் தனியார்துறை ஸ்தாபனங்களுடன் மிக நெருக்கமான வியாபார உறவுகளை நிருவகித்து வருகின்றது. ஏனைய அச்சிடல் ஊடக கம்பனிகள் தனியார்துறையைச் சேர்ந்தவையாகும். கடும் போட்டிக்கு மத்தியில் ஏஎன்சிஎல் உயர் விகித சந்தை ஊடுருவலை நிருவகிக்க வேண்டியுள்ளது. அதேவேளை ஏஎன்சிஎல் இடர்பாடுகளை எளிதில் புரிந்து கொள்ளக்கூடிய வகையில் வியாபாரத்தைப் பாதுகாப்பதற்கும் போட்டியாளர்களை எதிர்கொள்ளக்கூடிய முறையிலும் மிக தகுந்த முறையில் நேர்த்தியாக விவகாரங்களைக் கையாளுவதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளது. பல தடவைகளில் கடன் கால எல்லையைத் தாண்டி கடன் வசதிகளை வழங்குதல் தவிர்க்க முடியாததாகும். எவ்வாறாயினும் கம்பனிக்கு இடையூறு ஏற்படாத விதத்தில் மிகப் பொருத்தமான முறையிலும் நிலைமைக்கு ஏற்ற முறையில் அறவீடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தவிர திறைசேரி வழங்கல்கள் தாமதத்தின் காரணமாக அரச துறை கடன்களைச் செலுத்தித் தீர்ப்பதில் பெரும்பாலும் தாமதத்தைக் கொண்டுள்ளது என்பதையும் ஏஎன்சிஎல் அறிந்து வைத்துள்ளது. அரச மற்றும் தனியார் துறை சார்ந்த வாடிக்கையாளர்களின் செலுத்தித் தீர்க்க வேண்டி வரவுகளுக்காக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

எ) வரவு ஆவணங்களில் போதியளவு பதிவுகள் இன்மை காரணமாக விளம்பரங்களுக்காக 2008இல் பெற்றுக்கொள்ளப்பட்ட வெளிநாட்டு வரவுகள் ரூபா 982,363/- இனம்காண முடியவில்லை. கோரிக்கைகள் பெற்றுக்கொள்ளப்படுகின்ற வரை செலுத்தித் தீர்க்கப்படுவதற்கு சில காலத்திற்கு நாம் இதனை சில்லறை கடன் கொடுத்தோரில் நாம் வைத்துள்ளோம். கடந்த மூன்று ஆண்டுகளில் எந்தவொரு கோரிக்கையையும் பெற்றுக்கொள்ளவில்லை என்பதால் இதனை 2012இல் சில்லறை வருமானமாக நாம் இதனை அங்கீகரித்துள்ளோம்.

ஏ) புதினப்பத்திரிகை தொழிலில் செய்தித் தாள், தகடுகள் மற்றும் கம்பளி போன்ற சில இறக்குமதி செய்யப்பட்ட பாவனைக்குரியவைகளின் விநியோக வளங்கள் மிக வரையறுக்கப்பட்டவையாகவும் முன் எடுத்துச் செல்லும் காலங்கள் மிக அபரிமிதமானதாகவும் இருக்கின்றன. இத்தகைய விநியோகங்களின் அவசரத் தேவையின் போது புதினப் பத்திரிகைக் கம்பனிகள் ஒன்றுடன் மற்றொன்று மிக நெருங்கிய வர்த்தக உறவுகளையும் ஒத்துழைப்பையும் பேணி வருகின்றன. அவ்வாறே ரிவிர மீடியா கோப்பரேஷனுக்கு நாம் 116.6 மில்லியன் பெறுமதி வாய்ந்த செய்தித்தாள்களை காசு/ கடன் அடிப்படையில் ரூபா 16.7 மில்லிய இலாபத்தில் விநியோகதித்துள்ளோம். இத்தொகைக்குப் புறம்பாக 2011 டிசம்பர் 31ஆம் திகதி யன்று நாம் ரூபா 20,472,394/- ஐ மீளப்பெற வேண்டியுள்ளோம். அத்துடன் இத்தொகை எதிர்காலத்தில் செலுத்தித் தீர்க்கப்படும் என நாம் நம்புகின்றோம்.

ஐ) அவ்வாறே லக்பிம புதினப் பத்திரிகைக் கம்பனிக்கு நாம் சில செய்தித்தாள்களை விநியோகித்துள்ளோம். 2011 டிசம்பர் 31ஆம் திகதியன்று அவர்களிடமிருந்து நாம் ரூபா 6,821,487/- ஐ மீளப்பெற வேண்டியுள்ளது. இந்த மிகுதியை அறவிடுவதற்கு நாம் சட்ட நடவடிக்கைகளை எடுத்துள்ளோம்.

ஃ) மொத்த தொகைக்குப் புறம்பாக ரூபா 1,814,872/- பெறுமதியான 63 காசோலைகள் மாத்திரம் ஒரு வருடத்திற்கு மேலாக செலுத்தித் தீர்க்கப்பட வேண்டியுள்ளது.

2.2.6 கணக்காய்வுக்கான சான்றுகள் போதாமை

இந்த முழுமையான பெறுமானத் தேய்வு கணக்கிடப்பட்ட ஏழு வாகனங்கள் கீழே விபரிக்கப்பட்டுள்ளவாறு ரூபா 7/- பெறுமதியில் நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ளன. வாகன இலக்கம் 300-8895 மற்றும் HJ-3824 என்பவை எமது வாகனத் தொகுதியில்

| வாகன இல. | கொள்வனவு ஆண்டு | செலவு | பெறுமானத் தேய்வு | எடுத்துச்செல்கின்ற பெறுமதி |
|---|---|---|---|---|
| 48-7374 | 1996 ஒக்டோ. | ரூபா 175,000.00 | ரூபா 174,999.00 | 1.00 |
| 48-9549 | 1997 மார்ச் | ரூபா 1,163,000.00 | ரூபா 1,162,999.00 | 1.00 |
| 50-2904 | 1986 செப். | ரூபா 265,500.00 | ரூபா 265,499.00 | 1.00 |
| 87-8848 | 1983 ஒக்டோ. | ரூபா 33,850.00 | ரூபா 33,849.00 | 1.00 |
| 300-8895 | 1998 நவ. | ரூபா 1,975,000.00 | ரூபா 1,974,999.00 | 1.00 |
| WP-HJ-3824 | 2003 செப். | ரூபா 2,495,834.00 | ரூபா 2,495,833.00 | 1.00 |
| 14-7469 | 1987 பெப். | ரூபா 266,450.00 | ரூபா 266,449.00 | 1.00 |

இன்னும் காணக்கூடியதாக உள்ளன. அத்துடன் அவை உள்ளக கணக்காய்வுப் பகுதியின் பௌதிக ரீதியான உண்மையை நிரூபிக்கின்ற அறிக்கையைக் குறிப்பிடுவதற்குப் பதிலாக நேரடியாக சரி பார்க்கக்கூடியதாக இருந்திருக்கும்.

ஏனைய வாகனங்கள் முன்னைய ஆண்டுகளில் விற்பனை செய்யப்பட்டிருந்தன. ஆனால் நிதிப் பகுதிக்குத் தகவல் கிடைக்கப்பெறாததன் காரணமாக நிதிக் கூற்றுக்களில் இன்னும் காண்பிக்கப்படுகின்றன. இந்த நிலைமை 2012 கணக்குகளில் சீராக்கல் செய்யப்படவுள்ளது.

2.2.7 சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்குகளுடன் இணக்கப்பாடின்மை

அ) i) 2010ஆம் ஆண்டு அறிக்கையில் மேற்கூறப்பட்ட 13(7)(அ)வின் பந்திக்கு நாம் பிரதிபலிப்பைச் செலுத்தக்கூடியதாக இல்லாதிருந்த போதிலும் 13(7)இன் சுருக்கிய பந்தியை உள்ளடக்கியிருந்த இறுதி அறிக்கை குறிப்பிட்ட காலப்பகுதியினுள் பிரதிபலிக்கப்பட்டிருந்தது.

ii) 2011ஆம் ஆண்டுக்கான வரையப்பட்ட வருடாந்த அறிக்கையின் பிரதி விரைவில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

iii) இது எதிர்காலத்தினுள் நிறைவேற்றப்படவுள்ளது.

ஆ) ஏனென்றால் காலக்கெடுமுறையில் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்துக்கு நிலுவையாகவுள்ள தொகைகளைச் செலுத்துவதன் மூலம் உள்நாட்டு இறைவரித் திணைக்களச் சட்டத்துடன் இணங்கியுள்ளது. எவ்வாறாயினும் கம்பனியின் பணிப்பாளர் சபை போனஸ் கொடுப்பனவிலிருந்து எழுகின்ற செலுத்துவோர் வரி அதன் ஊழியர்கள் சார்பாக கம்பனியினால் பொறுப்பேற்கப்படல் வேண்டுமென தீர்மானம் எடுத்துள்ளது.

இ) i) இது எதிர்காலத்தில் சம்மதிக்கப்படவுள்ளது.

ii) ஏற்றுக்கொள்ளப்பட்டது.

2.2.8 சச்சரவைத் தோற்றுவிக்கும் தன்மைகொண்ட விடயங்கள்

வர்த்தக அச்சிடலில் நிபுணத்துவம் பெற்ற அரசுக்குச் சொந்தமான கம்பனி என்ற வகையில் அரசின் வர்த்தக அச்சிடல் தொழில்களில் சில அவசர முறையில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பல்வேறு அரச துறை சார்ந்த நிறுவனங்களாகக் குறிப்பிடப்படுகின்றன. அத்தகைய வேலைகளில் சில கணக்காய்வில் குறிப்பிடப்பட்டுள்ள அச்சிடல் வேலைகளுக்கான கொடுப்பனவுகள் இன்னும் பெறப்படவில்லை. இத்தொகைக்குப் புறம்பாக ரூபா 7,980,000/- மீள அறவிடப்படவில்லை என இந்த ஆண்டில் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

## 3. நிதிசார் மீள்நோக்கு

3.1 ஏற்றுக்கொள்ளப்பட்டது.

3.2 ஏற்றுக்கொள்ளப்பட்டது.

## 4. செயற்பாட்டு மீள்நோக்கு

4.1 செயற்பாடு

அ) ஏற்றுக்கொள்ளப்பட்டது.

ஆ) i. 18 பத்திரிகைகளினால் பரவலாக்கப்பட்ட மொத்த விளம்பர வருமானம் ரூபா 259,601,516/- இனால் அதிகரிக்கப்பட்டுள்ளது. இது 2010ஆம் ஆண்டைவிட 13% வளர்ச்சியைக் கொண்டு சாதனை படைத்துள்ளது. 18 பிரசுரங்களின் முழுமையான பக்கத்திற்குப் புறம்பாக 2இல் மாத்திரம் இந்த ஆண்டின் நடுப்பகுதியில் கிட்டத்தட்ட 15% ஆல் விளம்பரக் கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளன. இந்த 2 திருத்தப்பட்ட பத்திரிகைகளில் விளம்பரத்தில் பரிமாணத்தைக் கவனத்திற்கொண்டு மொத்த விளம்பர வருமானம் தொடர்பாக கட்டணம் திருத்த அழுத்தம் எல்லையைக் கொண்டிருத்தல் வேண்டும்.

ii. 18 பத்திரிகைகள் மூலமாகப் பரவலாக்கப்பட்ட முழுமொத்த புதினப் பத்திரிகை விற்பனை வருமானம் நடைமுறை ஆண்டில் ரூபா 592,496,356/- லிருந்து ரூபா

674,994,020/- வரை அதிகரிக்கப்பட்டுள்ளதுடன், ரூபா 82,497,664/- ஆல் அதிகரிக்கப்பட்டு 14% வளர்ச்சி பெற்று சாதனை படைத்துள்ளது. இந்த ஆண்டின் நடுப்பகுதியில் அட்டை விலைகள் 18 பிரசுரங்களின் முழுமையான பக்கங்களுக்குப் புறம்பாக 9 பிரசுரங்களில் மாத்திரம் அதிகரிக்கப்பட்டுள்ளன.

iii. ஏற்றுக்கொள்ளப்பட்டது.

## 4.2 முகாமைத்துவ திறமையின்மை

அ) இந்த விவகாரம் தொடர்பாக நாம் புலனாய்வுகளைச் செய்து வருகின்றோம். அத்துடன் 2012இல் பொருத்தமான நடவடிக்கையை எடுப்பதற்கு நாம் எதிர்பார்க்கின்றோம்.

ஆ) ஏஎன்சிஎல் இன் முழுமையான உரித்துடைய துணைக் கம்பனியாகிய இது இன்னும் செயற்பாடுகளை ஆரம்பிக்கவில்லை. ஆகவே, இதுவரை பங்கிலாபங்கள் செலுத்தப்படவில்லை. எவ்வாறாயினும் லேக் ஹவுஸ் புரொபர்டி டெவலொப்மென்ட் (பிரைவேட்) லிமிடெட் ஹோகந்தரையில் 8 ஏக்கர் காணியைக் கொள்வனவு செய்துள்ளது. இது கணிசமான மூலதன இலாபத்தை பரவச் செய்யலாம். அத்துடன் திறைசேரி உண்டியலில் ரூபா 9.6 மில்லியனை முதலீடு செய்துள்ளது.

## 4.3 செயற்பாட்டு திறமையின்மை

வர்த்தக அச்சிடல் பகுதியின் கீழ் நடைமுறைத் திட்டம் மற்றும் வரவு செலவுத் திட்டத்தைத் தயாரிப்பதில் 2011இல் அரச பாடசாலை பாடப் புத்தகம் அச்சிடுவதிலிருந்து ரூபா 200 மில்லியன் வெளிவாரி வருமானத்தை நாம் எதிர்பார்த்துள்ளோம். எவ்வாறாயினும் நாம் இந்தக் கேள்வியின் பிரமாண்டமான பரிமாணத்தை நாம் அடைய முடியவில்லை. ஏனெனில் எமது விலைமனு மிகக் குறைவானதாக இருக்கவில்லை. கேள்வியை நாம் பெற்றுக்கொண்டிருந்தோமாயின் இதன் விகிதம் வெளிவாரி 53% ஆகவும் உள்ளக 47% ஆகவும் மாற்றமடைந்திருக்க முடிந்திருக்கும்.

## 4.4. சொத்து முகாமைத்துவம்

அ) இந்த 7 வாகனங்களை விற்பனை செய்வதற்கு நாம் ஒரு பொதுக் கேள்வியைக் கோரியிருந்தோம். ஆனால் நாம் ஆகக்கூடிய விலைமனுவுக்கு 3 வாகனங்களை மாத்திரமே விற்பனை செய்யக்கூடியதாக இருந்தது. மிகுதி 4 வாகனங்கள் தொடர்பாக ஆகக்கூடிய குறிப்பிட்ட மனுதாரர்கள் எமக்கு அறிவித்த போதிலும், ஒருவரும் சாத்தியமான முறையில் பிரதிபலிக்கவில்லை. அவ்வாறே அவர்களது கேள்வி வைப்புக்கள் பறிமுதல் செய்யப்பட்டு நேர்த்தியான கேள்வி கோரப்பட்டுள்ளது.

ஆ) கவர்ச்சிகரமான கேலிச் சித்திர அட்டைகளுடன் சந்தைக்கு புதிய பயிற்சிப் புத்தகங்கள் ஊடுருவியதை அடுத்து இந்தப் புத்தகங்களின் விற்பனை இடையூறுகளுக்கு உள்ளாக்கப்பட்டது. எவ்வாறாயினும் கையிருப்புக்களை விலை கழிவுகளுடன் விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஆனால் கழிவுகள் வழங்கப்பட்ட போதிலும் அவற்றின் விற்பனை வாடிக்கையாளர்களினால் குறைந்த தேவை கொண்டிருந்ததன் காரணமாக விற்பனை மிகக் குறைவாகவே காணப்பட்டது.

இ) 147 எண்ணிக்கை கொண்ட கெமராக்களும் அவற்றின் உபகரணங்களும் சேதங்கள் மற்றும் தொழில்நுட்பம் உபயோகத்தில் இல்லாததன் காரணமாகவும் ஒரு தசாப்தத்திற்கு மேலாக பயன்படுத்தப்படாதிருந்துள்ளன. இந்தப் பொருட்களின் பரிமாணங்களும் கிடைக்கக்கூடியதான அறிக்கைகளிலிருந்து நிறுவ முடியவில்லை. ஆகவே, பொருத்தமான முறையில் விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

## 4.5 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

அ) கல்விப் பிரசுரத் திணைக்களத்தினால் ஒப்புநோக்குதல் தாமதம் காரணமாக எமது முயற்சியைப் பூர்த்தி செய்வதில் தாமதங்கள் சம்பவித்துள்ளது. ஆனால் திணைக்களத்தின் அதிகார வளங்களுக்கு செய்யப்பட்ட எழுத்து மூலமான மற்றும் வாய்மூல பிரதிநிதித்துவங்களுக்கு நாம் பிரதிபலிப்புக்களைச் செய்திருக்கவில்லை. தாமதங்களுக்குப் பங்களிப்புச் செய்த ஏனைய காரணிகள் தரக் குறைவான வரைவுகள் முடிவில் அவற்றை மீள வரைய வேண்டியிருந்தது. விசேட விடுமுறைகள் குறுக்கிட்டதனாலும் உற்பத்தி செய்கின்ற நாடுகளில் இயற்கை அழிவுகள் போன்ற காரணங்களினாலும் அச்சிடல் காகிதங்களைப் பெற்றுக்கொள்வதில் தாமதங்கள் ஏற்பட்டன. பயன்படுத்தப்படவுள்ள காகிதங்களின் தேவையான தரங்களை உறுதிப்படுத்தி முன் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்ட போதிலும் ஜிஎஸ்எம் அல்லது ஒளி ஊடுருவ முடியாத நிலை பற்றாக்குறையைக் குறிப்பிட்டு தண்டப் பணம் ஒருதலைப் பட்சமாக விதிக்கப்பட்டது. எவ்வாறாயினும் எல்லாப் புத்தகங்களும் ஒரு மற்றும் அதே காகித ஆலையினால் உற்பத்தி செய்யப்பட்ட கஷ்டங்கள் நீங்கப்பெற்ற காகிதங்களைப் பயன்படுத்தி அச்சிடப்பட்டுள்ளன.

ஆ) பொதுமக்களின் நலன்களை உள்ளடக்கிய தகவல் அல்லது ஆக்கங்களை புதினப் பத்திரிகைகள் கொண்டிருக்கின்ற போது செய்தி முகவர்களுக்கு அனுப்பப்படுகின்ற புதினப் பத்திரிகைகளின் தொகைகளும் ஒழுங்கான எல்லையைத் தாண்டி அதிகரிக்கப்பட்டுள்ளன. புதிய பத்திரிகைகள் ஆரம்பிக்கப்படுகின்ற போது அல்லது விஷேட ஊக்குவிப்பு நடவடிக்கைகள் பொறுப்பேற்கப்படுகின்ற போது போதிய எண்ணிக்கை கொண்ட புத்திரிகைகளை அச்சிட்டு நாடுபூராகவும் அனுப்புகின்ற உபாயத்தை நாம் கடைப்பிடிக்கின்றோம். மீளாய்வுக்குட்பட்ட காலப்பகுதியில் நாம் பல புதிய பிரசுரங்களை ஆரம்பித்துள்ளோம். அத்துடன் சில ஊக்குவிப்புக்கள் மேலதிக விநியோகம் காரணமாக உயர் இலாப வீத பெறுபேற்றைக் கொண்டிருந்தது.

## 4.6 காசு முகாமைத்துவம்

இனம் காணப்படாத வரவுகள் மற்றும் செலவுகளைப் பொருத்தமான முறையில் கணக்கிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

## 4.7 இனம்காணப்பட்ட நட்டங்கள்

அ) புதினப் பத்திரிகைகள் அச்சிடல் செயற்பாட்டில் சில பிரதிகள் தவிர்க்க முடியாதவாறு விரயத்திற்குள்ளாவதும் பழுதடைவதும் மேலதிக அச்சிடல் போன்றவையும் வழமையானதாகும். முதலில் அச்சிடல் மிகக் குறைந்த வேகத்தில் ஆரம்பிக்கப்படுகின்றது. பின்னர் தேவையான தரத்தில் அச்சிடல் வெளிப்பாடு பல்வேறு சீராக்கல்களை நிறைவேற்றுகின்றது. அந்த முனைவரை பரவலாக்கப்பட்ட பிரதிகள் சேதமடைந்தவையாகவும் அவற்றில் சில சக ஊழியர்களுக்கு இலவசப் பிரதிகளாக வழங்குவதற்கும் மிகுதி நிறை அடிப்படையில் விற்பனை செய்வதற்கும் அங்கீகாரத்தைப் பெறுகின்றன. கைத்தொழிலில் ஏற்றுக்கொள்ளப்படக்கூடியதான தரத்தில் 5% இற்குக் குறைவான கழிவுகளை நாம் இயக்குகின்றோம். அச்சகம் மிக உயர்ந்த வேகத்தில் ஓடுகின்ற போது தேவைப்படுகின்ற சரியான முனையில் நிறுத்துவது சாத்தியமானதல்ல. ஆகவே சில பிரதிகள் எப்பொழுதும் மேலதிக பரவலாக்கல் விளைவுகளைத் தோற்றுவிக்கும். மேலும் தேவைக்குக் கீழ் முனையில் நாம் நிறுத்துகின்ற போது மாற்றத்தை ஈடு செய்வதற்கு அச்சகத்தை மீண்டும் ஆரம்பிக்க வேண்டிய தேவை ஏற்படுகின்றது. முதலாவது அச்சிடலில் எல்லை மேலதிகங்களுடன் ஒப்பிடுகையில் இது உயர்ந்த எண்ணிக்கை கொண்ட மேலதிக பிரதிகளை பரவலாக்கும். நாம் 2% இற்குக் குறைவான மேலதிக அச்சிடலை இயக்குகின்றோம். அத்துடன் இந்த நிலைமை கைத்தொழில் தரத்தில் சிறந்ததாகும்.

ஆ) ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது,

## 4.8 கம்பனியின் வளங்களை ஏனையோருக்கு வழங்குதல்

இந்த அதிகாரிகள் வேண்டுகோளின் பேரில் அரச துறை சார்ந்தோருக்கு மாத்திரம் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

## 5. கணக்கியலும் கூட்டுறவு ஆளுமையும்

### 5.1 வருடாந்த அறிக்கையை அட்டவணைப்படுத்தல்

2012 ஆகஸ்டில் 2010 வருடாந்த அறிக்கைகளைப் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிப்பதற்கு நாம் மதிப்பீடுகளை செய்துள்ளோம்.

## 6. முறைமையும் கட்டுப்பாடும்

அ) ஒப்பந்தக்காரர்களின் முற்பணங்களைப் பின்தொடர்கின்ற புதிய முறையை நாம் அறிமுகம் செய்துள்ளோம். 2009 இலிருந்து அறவிட முடியாத முற்பணங்கள் எதுவுமில்லை.

ஆ) கிளை மிகச் சிறிய காசு (Petty Cash) பதிவேடுகள் மற்றும் பிரதான பதிவேடுகளுக்கிடையிலான நீண்ட கால செலுத்தித் தீர்க்க வேண்டிய வேறுபாடுகளை இனம் காண்பதற்கு நாம் மதிப்பீடுகளைச் செய்யவுள்ளோம்.

இ) வர்த்தக அச்சிடல் பகுதி தற்பொழுது அச்சிடல் ஆற்றல்களின் தீவிரமான தொழில்நுட்ப உயர்வுகளுடன் இயங்கி வருகின்றது. அத்துடன் கணக்கு மற்றும் கட்டுப்பாட்டு முறைகளை ஏக காலத்தில் தரமுயர்த்துவதற்கு நாம் திட்டமிட்டு வருகின்றோம்.



**பந்துல பத்மகுமார**
தலைவர் மற்றும் முகாமைத்துவப் பணிப்பாளர்.

**தி அசோசியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடெட்**
**வருமானக்கூற்று**

**2011 டிசம்பர் 31 முடிவடைந்த ஆண்டுக்கான**

| | குறிப்பு | 2011<br>ரூபா '000 | 2010<br>ரூபா '000 |
|---|---|---|---|
| **தேறிய வருமானம்** | 1 | 3,075,267 | 2,920,218 |
| விற்பனைச் செலவு | | (1,524,782) | (1,504,768) |
| **மொத்த இலாபம்** | | 1,550,485 | 1,415,449 |
| ஏனைய செயற்பாட்டு வருமானம் | 3 | 117,319 | 107,027 |
| | | 1,667,805 | 1,522,476 |
| நிருவாக செலவினங்கள் | | (1,230,158) | (1,319,657) |
| விநியோக செலவுகள் | | (311,895) | (319,789) |
| **வரி விதிப்பிற்கு முன்னர் செயற்பாட்டு கருமங்களிலிருந்து இலாபம்** | 2 | 125,752 | (116,969) |
| நிதிச் செலவினங்கள் | | (111,715) | (70,806) |
| **வரி மற்றும் VRS இற்கு முன்னர் இலாபம்/(நட்டம்)** | | 14,036 | (187,775) |
| சுயேச்சையான பதவி விலகல் திட்ட செலவு | 6 | - | (172,007) |
| **வரி விதிப்பிற்கு முன்னர் இலாபம்/(நட்டம்)** | | 14,036 | (359,782) |
| வரி விதிப்பு | 4 | (2,136) | (2,856) |
| தாமதித்த வரி விதிப்பு | 9 | (22,938) | 25,025 |
| **வரி விதிப்பிற்கு பின்னர் இலாபம்/(நட்டம்)** | | (11,037) | (337,613) |
| ஒரு பங்குக்குரிய அடிப்படை/திரவநிலை வருமானங்கள் (ரூபா) | 5 | (3.17) | (96.91) |

# ஐந்தொகை

**தி அசோசியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடெட்**
**2011 டிசம்பர் 31ஆம் திகதியன்றுள்ளவாறு ஐந்தொகை**

| சொத்துக்கள் | குறிப்பு | 2011<br>ரூபா '000 | 2010<br>ரூபா '000 |
|---|---|---|---|
| **நடைமுறையல்லா சொத்துக்கள்** | | | |
| சொத்து, பொறித்தொகுதி மற்றும் உபகரணம் | 7 | 289,224 | 226,910 |
| துணைக்கம்பனிகளில் முதலீடு | | 7,500 | 7,500 |
| ஏனைய முதலீடுகள் | 8.1 | 359 | 359 |
| தாமதித்த வரி | 9 | 147,219 | 170,157 |
| | | 444,303 | 404,927 |
| **நடைமுறை சொத்துக்கள்** | | | |
| பொருட்பட்டியல் மற்றும் நடைமுறை வேலை | 10 | 475,184 | 426,241 |
| வியாபார மற்றும் ஏனைய பெறவேண்டியவை | 11 | 834,407 | 949,096 |
| துணைக் கம்பனிகளிலிருந்து வருமதியான நிலுவை | | 955 | 756 |
| வருமான வரி | 4 | 37,756 | 15,823 |
| பங்குகளில் குறுகிய தவணை முதலீடுகள் | 8.2 | 647 | 647 |
| காசு மற்றும் காசுக்குச் சமனானவை | | 31,398 | 67,770 |
| | | 1,380,348 | 1,460,335 |
| **மொத்த சொத்துக்கள்** | | 1,824,650 | 1,865,262 |
| **சமநிலைப்பாடும் பொறுப்புக்களும்** | | | |
| மூலதனமும் ஒதுக்கங்களும் | | | |
| குறிப்பிடப்பட்ட மூலதனம் | 12 | 34,837 | 34,837 |
| வருமான ஒதுக்கங்கள் | 13 | 237,483 | 248,520 |
| | | 272,320 | 283,357 |
